Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 26 (27.07.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 297

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-976)

# இடைக்கால திட்ட வரைபில் எந்த வேறுபாடும் இல்லை!

## சரணடைந்த கடற்படைச் சிப்பாய் புலிகளால் விடுவிப்பு!

கிளாலியில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தார்.

கிளாலிக் கடற்கரைப்பகுதியில் உள்ள கடற்டை முகாமிலிருந்து வெளியேறிய சிப்பாய் ஒருவர், பொது மக்களின் ஊடாக விடுதலைப் புலிகளிடம் நேற்றுமுன்தினம் இரவு சரணடைந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கருத்துக்கு வெஸ்பேர்க் மறுப்பு

(கொழும்பு)

**ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட வரைபுகளில், பெரியளவிலான வேறுபாடுகள் இருப்பதாக -**

**பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்துக்கு, நோர்வே விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மறுப்புத் தெரிவித்தார்.**

ஜனாதிபதிக்கும், புலிகளுக்கும் வழங்கப்பட்ட திட்ட வரைபுகளில் வேறுபாடுகள் இருப்பதாக, லக்ஷ்மன் கதிர்காமர் கருத்து வெளியிட்டதையடுத்து - நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் அவரைச் சந்தித்து, இது தொடர்பான விரிவான விளக்கங்களை அளித்தார்.

இதன்போது - புலிகளுக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்ட திட்ட வரைபுகளில் எந்த வேறுபாடும் இல்லை என்பதை வலியுறுத்தியதுடன், புலிகளுக்கு அனுப்பப்படவிருந்த திட்டவரைபு குறித்து, ஜனாதிபதிக்கு முன்னதாகவே தெரியப்படுத்தப்பட்டிருந்ததாகவும் - வெஸ்பேர்க், கதிர்காமரிடம் தெரிவித்தார்.

அத்துடன் -

இலங்கையின் இறைமையை மீறும்விதத்தில், நோர்வே ஒருபோதும் நடந்துகொள்ளவில்லை என்றும் குறிப்பிட்ட ஜோன் வெஸ்பேர்க், சொந்த அரசியல் நலன்களுக்காக இத்தகைய பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டாம் எனவும் கதிர்காமரிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரியவருகிறது. (200)

## விடுதலைப் புலிகளின் யோசனைகளுடன்
## அரசின் இடைக்கால திட்டவரைபு நோர்வேயிடம் ஒப்படைக்கப்படும்!

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, புலிகளிடம் அரசு சமர்ப்பித்த திட்ட வரைபில், தமது யோசனைகள் சிலவற்றையும் இணைத்து, விரைவில் நோர்வே சமாதானக் குழுவிடம் புலிகள் ஒப்படைப்பார்கள் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாக வரைபை ஆராயும் புலிகளின் சட்டநிபுணர்கள் குழு - தமது திருத்தங்களையும் இவ்வரைபுடன் இணைத்து, இச்சட்டவரைபை வன்னி வரும் நோர்வே தூதுக்குழுவிடம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



கதிர்காமர் உப்பிடி எத்தினை புலுடா விட்டிருக்கிறார்....!

## குரங்குப்பாஞ்சான் முகாம் குறித்து ஆராய
## நோர்வே அமைச்சர் வன்னி செல்ல திட்டம்!

(திருகோணமலை)

கிண்ணியா - குரங்குப்பாஞ்சானில், புலிகளின் முகாம் அமைக்கப்பட்டுள்ளது குறித்து பேச்சுக்கள் நடத்த, நோர்வேயின் விசேட தூதுவர் ஒருவர் வன்னிக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் அல்லது பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோரில் ஒருவரே விரைவில் வன்னி செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமை அகற்றப் புலிகள் மறுத்துள்ள நிலையிலேயே - சிக்கலைச் சுமுகமாகத் தீர்க்க, நோர்வே அமைச்சர் வன்னி செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இளநிலை அதிகாரிகள் பயிற்சி நிறைவில் தேசியத் தலைவர் பிரபாகரன் பங்கேற்பு!







விடுதலைப் புலிகளின் இளநிலை அதிகாரிகள் போர்ப்பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்ற ஒரு தொகுதி அதிகாரிகளின் பயிற்சி நிறைவுநாள் நிகழ்வில், தமீழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதவை உறுப்பினரை தடுத்து வைத்த சித்த மருத்துவத்துறை மாணவர்கள்!

யாழ்.பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறையைத் தனியான நிறுவனமாக மாற்ற எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இத்துறையை தனியானதொரு பீடமாக மாற்றக்கோரியும் - போராட்டம் நடத்திவந்த சித்தமருத்துவ மாணவர்கள், யாழ். பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்களை, இராமநாதன் மண்டபத்திலிருந்து வெளியேறவிடாமல் தடுத்து, போராட்டம் நடத்தினர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

யாழ். பல்கலைக்கழகத்தின் ஒரு பீடமாக, சித்த மருத்துவத்துறை அலகை மாற்றக்கோரி, கடந்த பதினெட்டு நாட்களாக, மாணவர்கள் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

நேற்று, யாழ். பல்கலைக்கழகத்தின் மூதவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை, பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்கள், மூதவைக் கூட்டத்தில் தமது கோரிக்கைகளுக்கு சாதகமான தீர்வைக் காணுமாறு கோரி, இராமநாதன் மண்டபத்தின் கதவுகள் அனைத்தையும் பூட்டி, மூதவை உறுப்பினர்களை வெளியேறவிடாமல் தடுத்து வைத்திருந்தனர்.

இதனால், நேற்றுக் காலை 9 மணியளவில், இராமநாதன் மண்டப கேட்போர் கூடத்தினுள் நுழைந்த மூதவை உறுப்பினர்கள், கூட்டம் முடிந்த பின்னரும் - மாலை வரை வெளியேற முடியாமல் உள்ளே இருந்தனர்.

இதன்பின்னர், பிற்பகல் 3 மணியளவில் மூதவைக் கூட்டத்தில் எடுத்த தீர்மானங்களை, மாணவர்களுக்குத் தெரியப்படுத்தி, அவர்களுடன் சமரச

(10 ஆம் பக்கம் பார்க்க)




## தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்; திருமலை மாவட்டம் முதலிடம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற, தமிழ்த்தினப் போட்டியின் நிகழ்வுகள் யாவும் நேற்றுடன் முடிவடைந்தன.

இந்த முடிவுகளின் அடிப்படையில், மாவட்ட மட்டத்தில் 98 புள்ளிகளைப் பெற்று - திருகோணமலை முதலாம் இடத்தையும், 94 புள்ளிகளைப் பெற்று - யாழ்ப்பாணம் இரண்டாம் இடத்தையும், 64 புள்ளிகளைப் பெற்று - வவுனியா மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

ஏனைய மாவட்டங்கள் பெற்ற புள்ளிகள் வருமாறு, மட்டக்களப்பு-63, கல்முனை-35, மன்னார்-30, கிளிநொச்சி-29, முல்லைத்தீவு-11

இதேவேளை - தமிழ்மொழித் தினப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு, நேற்று யாழ்.இந்துமகளிர் கல்லூரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -1139)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

# இரதோற்சவ சிறப்பிதழ்

### சிறப்புமிகு உற்சவங்கள்

மாவை முருகப்பெருமான் கோவிலில் நடைபெறும் பல்வேறு உற்சவங்களுள் தைப்பூசத் திருநாளும்,ஆனி,ஆடி மகோற்சவாதிகளும், ஐப்பசி சுக்கிரவாரம், கந்த சஷ்டி விழாக்களும், கார்த்திகையில் வரும் திருக்கார்த்திகை விழாவும் மிக மிகப் பிரசித்தமானவையாகும்.

தைப்பூசத் திருநாளென்று ஷண் முருகப்பெருமான் தேரின் மீது வந்து அடியார்களுக்கு அருள் தரும் காட்சி பார்க்கப் பார்க்கப் பரவசம் ஊட்டும். ஆனிமாத பூர்வபஷ்ஷ ஷட்டியில் துவ ஜாரோஹணமாகித் தொடர்ந்து இருபத்தைந்து நாட்களுக்கு உற்சவங்கள் நடைபெறும். ஐந்தாம் திருநாளன்று ஷண்முகப்பெருமான் திருநடனமாடும் உற்சவம் நடைபெறுகிறது. இந்நடனம் வாத்திய இசை, பஜனை ஆகியவற்றோடு நடைபெறும் காட்சியும், கோலமும், தன்மையும் வேறெங்கும் காண முடியாதவை. கார்த்திகைத் திருநாளன்று அநேகர் காவடியெடுத்தும், நாள் பூராவும் மாவிளக்கேற்றி சகஸ்கர நாமர்ச்சனைகள் செய்வித்தும் தத்தம் வழிபாடுகளை இயற்றுவர். பிள்ளை விற்றல், அன்னப்பிராசனம் அள்ளுகாசு வழங்கல் மற்றும் தத்தம் நேர்த்திக்கடன்களைப் பூர்த்தி செய்தும், அபிஷேகம் செய்வித்தும் தங்களது வழிபாடுமுறைகளை அடியார்கள் செய்வர். அன்றிரவு மும்மூர்த்திகளும் பூஞ்சப்பரத்தில் வீதிவலம் வருங்காட்சியும், பகலில் மயில் மீதேறிக் கந்தசுவாமியார் வீதிவலம் வருங்காட்சியும் கண் கொள்ளாக்காட்சியாகிவிடும். இருபத்திரண்டாந் திருநாள் 'மிருக யாத்திரை' என்னும் வேட்டைத்திரு நாளாகும். அன்றும் இங்கு ஒரு தனிச்சிறப்பை மக்கள் காண்பார்கள். இருபத்து மூன்றாந் திருநாள் பெரிய சப்பரத் திருநாளாகும்.

ஒவ்வொன்றும் நூறு யாரளவிலிருக்கும் நான்கு வடக்கயிறுகள் பூட்டிய இப்பெருஞ் சப்பரத்தை இழுப்பதற்குப் பத்தாயிரத்துக்கதிகமானவர்கள் வேண்டும். இப்பெருஞ் சப்பரம் அசையும்போது 'இது ஒரு அசையுங் கோபுரமோ' எனவும் 'மாமலையொன்று ஊர்கிறதோ' என்றும் மக்கள் வியப்புறுவர்.

### பஞ்சரதோற்சவம்.

இருபத்திநாலாம் நாள் உற்சவம் பஞ்சரதோற்சவ்மாகும். விக்னேஸ்வரர், கந்தசுவாமி, சந்திரசேகரர், ஷண்முகர், தண்டேஸ்வரர் ஆதியாம் மூர்த்திகள் வரிசை யாகத் தேரின் மீதமர்ந்து வரும் காட்சி உண்மையில் பார்ப்பதற்கு இரம்



மியமான ரோஹணமாகி மகோற்சவங்கள் தண்டேஸ்வர, ஆசார்ய உற்சவங்களோடு இறுதிக்கட்டத்தையடையும். இருபத்தாறாம் நாள் தண்டாயுதபாணி உற்சவம் எல்லா உற்சவங்களுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமைந்து விடுகின்றது. இவ்வுற்சவம் 1964 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. புராண வரலாற்றை முழுமையாக எடுத்துக்காட்டக் கூடியதாக இவ்வுற்சவம் அமைந்திருக்கிறது. சங்கீத கதாப்பிரசங்கங்கள், இன்னிசைக் கச்சேரிகள் ஆகியனவும் உற்சவ காலங்களில் விசேஷமாக அலங்கரிக்கப்பட்ட வஸந்த மண்டபத்தில் நிகழும்.

### விசேஷ விழாக்கள்

நவராத்திரி பூசைகளும் இங்கு நடைபெறுகின்றன. மானம்பூ என்றழைக்கப்படும் 'விஜயதசமி'யிலன்று கந்தசுவாமியார் இங்கிருந்து தெற்கே இருமைல்களுக்கப்பாலுள்ள தெல்லிப்பளைத் துர்க்கையம்மன் கோவிலுக்கு எழுந்தருளுவார். அங்குதான் சமீவிருஷ பூசையும் மகிஷா சூரசம்ஹாரமும் நடாத்தப்படுகின்றன. பின்னர் அங்கிருந்து பற்பல கலை நிகழ்ச்சிகளோடு ஆலயத்திற்கு எழுந்தருளுவார்.

அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்தருங்காட்சியும், ஆருத்ரா தரிசனத்திற்கு முந்திய தினத்தில் நடராஜப் பெருமான் தேரின் மீதமர்ந்து வருங்காட்சியும் பக்தர்களைப் பரவசமடையச் செய்துவிடும். அன்றிரவு விசேஷ அபிஷேகமானதும் அதிகாலையில் ஆருத்திரா தரிசனம் நடைபெறும். இவ்வாலயத்தில் கந்த புராணபடனம் வைகாசியில் ஆரம்பமாகி, மகோற்சவ இரண்டாந் திருநாளன்று பூர்த்தியடையும். பூர்த்தி விழாவன்று அந்தணர்களுக்கும் மற்றும் ஏனையோருக்கும் தானங்களும், தெட்சணைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதேபோல் திருச்செந்தூர்ப் புராணபடன முடிவிலும் பக்தர்கள் தானங்களை வழங்கி ஆசீர்வாதங்களைப் பெறுகிறார்கள்.

**- மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள்.**

### மாவைக் கந்தனின் இரதோற்சவநாள் இன்று



**'மாவைக் கந்தா
சரணம் சரணம்
வடிவேல் முருகா சரணம்
சரணம்''**

என்று பாடிக்கொண்டு வீதிவலம் வருகிறார்கள் பக்கதர்கள். அந்தணப் பெருமக்களின் ஈடுபாடும் அடியவர்களின் ஆரோகரா ஒலியும் கூடி நிற்போரை மெய்மறக்கச் செய்கிறது. அன்று தேரோடும் வீதியில் ஐந்து ரதங்களைக் கண்டோம். இன்று அன்பர்களின் பக்திப் பிரவாகத்தைக் கண்குளிரக் காண்கின்றோம். முருகப் பெருமானின் அற்புத மகோற்சவம் அடுத்து எமக்காக வந்து சேரட்டும்.

**தங்கம்மா அப்பாக்குட்டி,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பளை.**

## இரதோற்சவம் சிறக்க வாழ்த்தி அனுசரணை வழங்குவோர்

## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

உங்களுக்குத் தேவையான புத்தகங்கள், பாடசாலை அலுவலக உபகரணங்களை மலிவாகவும்நியாய விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்.
**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1269) T.P.-021-2225542

உள்ளூரிலேயே கடந்த 22 வருடங்களுக்கு மேலாக மக்களுக்கு சேவையாற்றும் ஒரே நிறுவனம்
**சுந்தர்சன்**
மத்திய சந்தை முன்பாக,
மானிப்பாய்
(சி/1272 ) T.P: 2222751

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**
GREAVES
இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222488, 021-2223820
(சி/1268 ) AGENTS FOR - GREAVES, SPARE PARTS

**சானுகா நகைமாடம்**
இல: 200G
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/1271) T.P: 021-2223700


**தெல்லிப்பளை
துர்க்காதேவி தேவஸ்தானம்**
நிர்வாகசபையினர்
தெல்லிப்பளை. T.P: 070-213151
(சி/1273)

**திரு.தனபாலசிங்கம்**
பத்திரிகை முகவர்
கே.கே.எஸ் வீதி,
இனுவில்
(சி/1267)

**விநாயகர் றேடர்ஸ்**
1026,கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
(சி/1265)

**தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்கம்**
தலைவர், பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர், பணியாளர்கள்,
தெல்லிப்பளை.
(சி/1274)

ஓவ்செட் துறைகளின் பயன்பாட்டிற்கோர் சிறந்த இடம்
**ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்**
424, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021-2222717 (சி/1270)

# தமிழ் மக்கள் கேட்பது இழந்துபோன ஐ.நா. சாசனத்திலுள்ள உரிமையையே!

## ஊடகவியலாளர் பயிற்சிக் கருத்தரங்கில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

நாம் கேட்பது பிரிவினை இல்லை. நாங்கள் இழந்த உரிமைகளை - ஐ.நா. சாசனத்திலிருக்கும் எமக்கான உரிமைகளையே கேட்கிறோம் என, யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையமும், யுனெஸ்கோவும் இணைந்து நடத்தும் - ஊடகவியலாளர் தொடர்பயிற்சித் திட்டத்தில் கலந்துகொண்டு, தொடக்கவுரையை நிகழ்த்தியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் - தகவல் ஊடகங்களை யார் கட்டுப்படுத்துகிறார்களோ, அவர்களே உலகைக் கட்டுப்படுத்துகிறார்கள். தகவல்களை யார் பெற்றுக்கொள்கிறார்களோ, அவர்களே அரசியல் மேம்பாட்டுக்கு காரணமாக விளங்குகின்றனர்.

இந்த மண்ணின் காலத்தின் தேவையை உணர்ந்து பணிபுரிந்த செய்தியாளர்கள், ஊடகவியலாளர்கள் நன்றிக்குரியவர்கள். அவர்கள் நினைவுகூரப்படவேண்டியவர்கள்.

தேசியத்தின் தேவையை உணர்ந்து - உழைப்பு, அர்ப்பணிப்பு, ஈடுபாட்டுடன் செயற்படவேண்டியது அனைத்து ஊடகவியலாளர்களின் பணியாகும்.

அரசியல், பொருளாதார, கலாசார முன்னேற்றங்களோடு பின்னிப்பிணைந்த வகையில், ஊடகவியலாளர்களின் பணி தேசியமயப்படுத்தப் படவேண்டும் என, அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு - யாழ். பல்கலைகழக புவியியற்துறைப் பேராசிரியர் சிவச்சந்திரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் மற்றும் வலம்புரி, நமது ஈழநாடு, தினக்குரல் பத்திரிகைகளின் ஆசிரியர்களும், வீரகேசரி பத்திரிகையாளர் ஜீவகதாஸும் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர். (ந)




# தேக்கு மரங்களை திருடிய முன்னாள் நீதிவான் கைது!

## அரச சொத்தைக் கையாடியதாக சாடல்

(கொழும்பு)

தேக்கு மரங்களைச் சட்டவிரோதமாகக் கையகப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் -

புத்தளம் நீதிமன்ற முன்னாள் நீதிவானும், பதிவாளரும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டு, புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் - சேவையிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முன்னர், நீதிமன்றப் பாதுகாப்பிலிருந்த தேக்கு மரங்களைச் சட்டவிரோதமாகக் கையகப்படுத்தி, அவற்றைக் களவாக விற்பனை செய்தனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு, புத்தளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

புத்தளம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இருவரையும் - 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், சாக்கடையொன்றிலிருந்து மீட்கப்பட்ட 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு தேக்கு மரங்களையும், அரசாங்கச் சொத்தாகப் பிரகடனப்படுத்தினார்.

# தீலீபன் மருத்துவமனைக்கு ஆழியவளையில் கட்டடம்!

வடமராட்சி கிழக்கு - ஆழியவளையில், திலீபன் மருத்துவமனைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணிகள், துரித கதியில் நடைபெற்றுவருகின்றன.

இந்த வைத்தியசாலைக்கான நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதற்கு - தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரும், வடமராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து, வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் மக்களும், நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளனர்.

சுமார் 30 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் - கடந்த மே மாதம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜியினால் நாட்டப்பட்டது.

இந்த வைத்தியசாலை - தற்போது தனியார் கட்டடமொன்றிலேயே இயங்கிவருகின்றது.

தியாகி திலீபன் மருத்துவ சேவையினரால், வைத்திய வசதிகள் குறைந்த பத்து இடங்களில், மருத்துவ நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் - ஆழியவளை திலீபன் மருத்துவமனைக்கே நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் நிரந்தரக் கட்டடம் அமைக்கவேண்டுமென்பதில் - கடற்புலிகளின் சிறப்புத் தளபதி, அக்கறையுடன் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (122)

## சீருடை வழங்குவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது!

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு - சீருடைகளை வழங்குவதற்கு வசதியாக, பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களிடமிருந்து பாடசாலைக் கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பத்தை, பாடசாலை ஆசிரியர் அல்லது அதிபரிடம் சமர்ப்பித்து, அவரது சிபார்சுடன் கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு, கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர், இந்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலய மகோற்சவம்

(நவிண்டில்)

அருள்மிகு அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. (116)

# இந்திய அகதி முகாம்களில் பிறந்தோர்; இங்கு பதிவைச் செய்ய நடவடிக்கை!

இந்திய அகதிமுகாம்களில் பிறந்த பிள்ளைகளின் பிறப்பை, இலங்கைச் சட்டதிட்டங்களுக்கு அமைய - உரியவாறு, பதிவுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவிலிருந்து இலங்கை திரும்புவோர் - இந்தியாவில் பிறந்த தமது பிள்ளைகளின் பிறப்பை, உரியவாறு இலங்கையில் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதற்காக, இந்த நடைமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான படிவத்தை, பிரதேச செயலகங்களில் பெற்றுப் பூர்த்தி செய்து - கீழ்வரும் ஆவணங்களுடன் இணைத்து பிரதேச செயலரிடம் சமர்ப்பித்தால், பிறப்பைப் பதிவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப் படுமென - யாழ். மாவட்ட காணிப் பதிவாளரும், மேலதிக மாவட்டப் பதிவாளருமான சதாசிவ ஐயர் அறிவித்துள்ளார்.

பெற்றோர் விவாகச் சான்று அல்லது அதனை உறுதிப்படுத்தும் ஆவணம், பெற்றோரின் பிறப்புச் சான்றிதழ்கள், பிள்ளைகளின் பட்டியல், பிள்ளைகள் வெளிநாட்டில் பிறந்தது என்பதை உறுதிப்படுத்தும் சான்றிதழ், அகதிகளாக இந்தியா சென்று திரும்பியதை உறுதிப்படுத்தும் சான்றிதழ், பெற்றோர் தற்போது வதியும் பிரிவு கிராம அலுவலரின் கடிதம் என்பவற்றை இணைத்து பிரதேச செயலரிடம் கையளிக்கும் பட்சத்தில்,

பிரதேச செயலரால் பெறப்படும் விண்ணப்பம், பதிவாளர் நாயகத்தின் ஊடாக வெளிநாட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டு - சென்னை அல்லது திருச்சியிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு அனுப்பப்பட்டு, அங்கு பதிவுசெய்துகொள்ள ஆவன செய்யப்படும் என, சதாசிவ ஐயர் மேலும் தெரிவித்தார்.

# அரச ஊழியருக்கு சம்பள உயர்வு நிதியமைச்சருக்கு ரணில் பணிப்பு!

(கொழும்பு)



அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வுகளை வழங்குமாறு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதி அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு, அரசாங்கக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோருடன் நடத்திய இராப்போசன கலந்துரையாடலிலேயே - நிதி அமைச்சருக்கு, பிரதமர் இந்த உத்தரவை வழங்கினார்.

நாட்டில் ஐ.தே.கட்சியின் செல்வாக்குகளை அதிகரிக்கவும், கட்சியின் வளர்ச்சிக்காக சகல உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் தெரிவித்த அவர்,

இதற்காகப் புதிய வேலைத் திட்டங்களை அறிமுகப் படுத்துமாறும் கூறினார்.

இதேவேளை - நாட்டில் அதிகரித்துள்ள பொருட்களின் விலை உயர்வைக் குறைப்பதற்கு, நடவடிக்கை எடுக்கப்போவதாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# இலங்கை-இந்திய பாலம் அமைப்பு; கடுமையாக எதிர்க்கிறார் வைகோ!



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கவுள்ள எந்தவொரு முயற்சிகளையும் - தான் எதிர்ப்பதாக, ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

இது தொடர்பாக, சிறையிலிருந்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்,

பாக்குநீரிணை ஊடாக, சேது சமுத்திரத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாலம் அமைகின்ற முயற்சிகள் தடையாகவே இருக்கும்.

இவ்வாறு பாலம் ஒன்று அமைக்கப்பட்டால், பாக்குநீரிணை ஊடாக பாரிய கப்பல்கள் செல்லமுடியாது. கிட்டத்தட்ட 130 வருடங்கள் திட்டமிடப்பட்டுவந்த சேது சமுத்திர திட்டத்தை, இதனால் கைவிடவேண்டிவரும். இந்த விவகாரம்பற்றி, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா எதிர்ப்புக்குரல் எழுப்பினாலும், அவர் கூறும் காரணம் வேறாகத்தான் இருக்கிறது.

அவர், தமிழகத்திற்கு கிடைக்கக்கூடிய பொருளாதார நன்மைகளைத் தவிர்த்து, இந்தப் பாலம் அமைப்பதனால் தமிழகத்திற்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுவிடும் எனக் கூறியிருக்கிறார்.

இது எந்தளவுக்கு நியாயபூர்வமானதெனத் தெரியாவிட்டாலும், அவரும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாலம் அமைப்பதை எதிர்க்கிறார் என்றே நாங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று, வைகோ மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரதேச ஊழியருக்கு உள்ளக இடமாற்றம்!

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் - தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், கணக்குப்பதியுநர்கள், அலுவலகப் பணியாளர் பலர் - அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் உள்ளக இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள், யாழ்.மாவட்டச் செயலகத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. ஒரே அலுவலகத்தில் ஐந்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றியோரை இடமாற்றம் செய்யும் திட்டத்திற்கமையவே, இந்த இடமாற்றம் வழங்கப்படுவதாகவும், ஏனைய தர அலுவலர்களுக்கும் இவ்வாறு விரைவில் இடமாற்றம் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# கடல்சார் நூதனசாலை கொழும்பில் அமைகிறது!

(கொழும்பு)

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் 24 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி, அடுத்த மாதம் முதலாம் திகதி - கொழும்புத் துறைமுகத்தில், கடல்சார் நூதனசாலையொன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நூதனசாலை - கப்பற்துறை அமைச்சரான ரவூப் ஹக்கீமினால், கொழும்புத் துறைமுகத்தில் வைபவரீதியாக திறந்து வைக்கப் படவுள்ளது.

கப்பல் சரக்குகளை களஞ்சியப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்திலேயே இந்த நூதனசாலை அமையவுள்ளது. இதுவே தற்பொழுது கொழும்புத் துறைமுகதத்தில் காணப்படும் பழைமை வாய்ந்த ஒரேயொரு கட்டடமாகும்.

நாட்டின் துறைமுகம், கடல் சம்பந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த - அதிமுக்கிய நிகழ்வுகளுக்கு அமைவாக, பலவிதமான காட்சிப் பொருட்களைக் கொண்டதாகவும், தொன்றுதொட்டு இன்றுவரை கொழும்புத் துறைமுகம் அடைந்துள்ள படிப்படியான முன்னேற்றங்களை பிரதிபலிப்பதாகவும் - விதம் விதமான ஓவியங்கள், மாதிரிகள், துறைமுக நடவடிக்கைகளுக்கு- வெவ்வேறு காலகட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பலவித உபகரணங்களைக் கொண்டதாகவும், இந்த நூதனசாலை அமைக்கப்பட்டுள்ளது.

## இந்த வருடம் 7,200 மாணவர்களுக்கு மகாபொல கிடைக்கும்!

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 7,200 மாணவர்களுக்கு - இந்த வருடம் மகாபொல புலமைப்பரிசில் கிடைக்கவிருக்கிறது.

எதிர்வரும் கல்வியாண்டுக்காக, 12 ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிபெற்றுள்ளனர்.

பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த, உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்க அனுமதிபெற்ற மேலும் 1000 மாணவர்களுக்கும், மகாபொல புலமைப்பரிசில் வழங்கப்படும் என்று, புலமைப்பரிசில் நிதியத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி எதிர்வரும் 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்கிறார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பர். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## கடகம்

(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூரம், ஆயிலியம்)



குருபெயர்வதற்கு முன்னதாக, நீங்கள் ஏழரைச்சனியின் பிடியில் சிக்கிவிட்டீர்கள். குருபெயர்ச்சி உங்களுக்கு நன்மையும், தீமையும் கலந்த பலன்களைத் தரும். உங்கள் உடல் மெலிந்து இருக்கும். முணுக், முணுக்கென்று கோபம் வந்து கொண்டிருக்கும். வீரம், ஆசாரம் சிறந்து விளங்கும், செல்வாக் குப் பெருகும். பொறுப்பு இல்லா நடத்தைகளால் அடிக்கடி தொல்லைகளுக்கு ஆளாவீர்கள். சிலருக்குக் கண்களில் புள்ளிகள் விழலாம்.

சிலர் வாக்குறுதிகளை மீறு வார்கள். விரச இனவார்த்தை கள் வாயில் அடிக்கடி வரும். பொறுமையைக் கடைப்பிடியுங் கள். வார்த்தைகளில் கோபம் இருந்தாலும், அதிலுள்ள நியா யத்தை உணர்ந்து, உள்ளுக்குள் உங்கள் நாவன்மையை அனை வரும் பாராட்டுவார்கள்.

உங்கள் உழைப்பே உங்க ளுக்கு உயர்வினை வழங்கும்.

நீங்கள் மாணவராக இருப் பின் உயர்கல்வி வாய்ப்புண்டு. மேதையாக உயர்வீர்கள். நீதி நூல்களை விரும்பிப் படிப்பீர் கள். நீங்கள் மக்களைப் பெற்ற மகராசரானால், உங்கள் ஆண் மக்களால் சில தொல்லைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆவணி முதல் இந்தத் தொல்லை இருக்காது.

உங்கள் பணியாளர்கள் மன தார உங்களுக்குத் துரோகம் செய்ய எண்ணுகிறார்கள். உங்களுக்கு உயர் இரத்த அழுத்தம் தோன்றலாம். கொழுப்பு, எண்ணெய், மது, மாமி சம் இவற்றைத் தவிர்த்து, சாத்வீக உணவை உண்ணப் பழகுங்கள்.

நீங்கள் உங்கள் தொழிலில் கவனமாக இருக்கவேண்டும். கூட் டாளிகளாலும், தொழில் விரோ திகளாலும் ஏமாற்றப்படுவீர்கள். சிலர் இதனால் இன்னும் கடுமை யாகப் பாதிக்கப்பட்டு, சிறைவாசம் செய்ய நேரிடலாம். ஆயுதங்களைக் கையாள்வதில் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இந்த ஆண்டு முற்பகுதியில் சம்பாதித்த பொருள் களைப் பிற்பகுதியில் செலவு செய்து விடுவீர்கள்.

நீங்கள் அரசுப் பணியாளராக இருப்பின் இடமாற்றம் உண்டு. வாடகை வீட்டில் குடி இருப்பவர் ஆயின், வேறு வீட்டிற்குக் குடிமாற் றம் ஏற்படும்.

உங்கள் தொழிலை இடமாற்றம் செய்யும்படி இருக்கும்.

நீங்கள் அரசியல்வாதியாய் இருப்பின், உங்கள் கட்சித் தலை மையிடமிருந்து பொறுப்பான பத வியை எதிர்பார்க்கமுடியாது. சில ருக்கு இருக்கும் பதவியும் பறிபோ கும் வாய்ப்பு உண்டு.

தலைநிமிராமல் தலை வணங்கி வாழ்ந்து வாருங்கள். நீங்கள் மாண வராயின், முயற்சிக்குத்தக்க வெற் றிகள் கிடைக்கும். உழவராயின் அளவான இலாபத்தை பூமித்தாய் தருவாள். மருத்துவத்துறை, கணினி மாணவர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்புக்கள் கிடைக்கும்.

தடைப்பட்ட திருமணங்கள் நடக்கும். சிலர் முன்னோர் சொத் தைப் புதுமை ஆக்குவார்கள். இத னால் வீண் விரயங்கள் ஏற்படும்.

காலத்தே செய்யுங்கள், கருத்து டன் செய்யுங்கள், இருப்பதை வைத்துச் சுகப்படுங்கள்.

அடக்கம் அமரருள் உய்க்கும் என்பதை மறவாதீர்கள். கணவ னுக்கு இனிமையான நட்பு மனைவி. மனைவிக்கு இனிய நட்பு கணவன் என்று காலங்கருதி வாழ்ந்து வாருங் கள்.

### ஆடி

கோயில்கள், தீர்த்த யாத்திரை செல்வீர்கள். கண் பரிசோதனை செய்து கொள்ளுங்கள். ஆயுள் விருத்தி ஏற்படும். கோடி தோஷங் கள் இருந்தாலும் விலகும் மாதம். அம்பாளை ராகு வேளையில் பூஜித்து வாருங்கள்.

### ஆவண

உங்கள் வார்த்தைகள் சில காரணங்களால் கடுமையாகின்றன. மோசமான சொற்களைப் பேசாதீர் கள். உங்கள் வாக்கில் நிபுணத்து வமும், சாமர்த்தியமும் கலந்து இருக்கவேண்டும்.

### புரட்டாதி

உங்கள் வீரம் உங்களை உயர்த் திக் காட்டும். உங்கள் தந்தை யாரின் உதவிகள் உங்களுக்குக் கைநழுவிப் போகின்றன. குடும் பத்தில் சலசலப்புக்கள் தோன்று கின்றன.

### ஐப்பசி

சிலர் கூரை வீட்டை, ஓட்டு வீடாக மாற்றுவார்கள். பகைவர்கள் தலைதூக்குவார்கள். அரசின் பகை கிடைக்க வாய்ப்புக்கள் அதிகம். மாணவராயின் கல்வி தடைப் பட வாய்ப்புண்டு. தேவையில்லா வழக்குகள் வந்துசேரும்.

### கார்த்திகை

சிவாலயம் சென்று தரிசித்து வாருங்கள். சிற்றின்ப நாட்டம் அதி கம் இருக்கம். ஆடம்பரச் செலவுகள் அதிகம் செய்வீர்கள்.

சூதாட்டத்தில் பணத்தை இழக்க வேண்டியிருக்கும், வருவாய் கிடைக்காது. தந்தையின் உடல் நலம் கெடும். தெய்வ அனுகூலம் இருக்கும் என்பதால், கெடுபலன் கள் வந்தாலும், உடனுக்குடன் நிவர்த்தியும் கிடைக்கும். என்ன செய்வது? வருவதை அனுபவித்துத் தானேயாக வேண்டும். திட்டமிட் டுச் செயற்பட்டால் நல்லது.

### மார்கழி

உங்கள் எதிரிகளை வெல்வீர் கள். லட்சுமி கடாட்சம் உண்டா கும். அரசின் கடைக்கண் பார்வை அனுகூலமாகக் கிடைக்கும். இருந்தா லும் ஒரு எச்சரிக்கை, தலையில் அடிபட வாய்ப்புக்கள் உண்டு. வழக்குகள் உங்களுக்குச் சாதகமாக முடியும்.

### தை

உங்கள் பத்தினிக்கு முன் கோபம் அதிகமாகவரும். சிலரின் மனைவிகளுக்கு அரசுப்பணி கிடைக் கும். சிலரின் பத்தினிமார்களுக்கு உஷ்ணம் தொடர்பான உபாதை கள் தோன்றும். குளிர்ச்சியை உண் டாக்கும் உணவினை அவர்கள் உண்ணவேண்டும்.

### மாசி

ஆயுதங்களைக் கையாள்வதில் எச்சரிக்கை வேண்டும். காயங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. உஷ்ணம் தொடர்பான நோய்கள் தோன்றலாம். தலைவலி, வயிற்றில் உஷ்ணவலி தோன்றலாம். அரசு அதிகாரிகள் பகையாகும் வாய்ப்பு உண்டு.

### பங்குனி

தந்தையின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். ஆனால் உறுதி யான மனம் படைத்தவர், நியாய உணர்வுகளை மதிக்கும் உத்தமர் என்பதால், இறையருளால் தப்பு வார்.

### சித்திரை

தொழிலில் அரசின் அனுகூலம் கிடைக்கும். சிலருக்கு அரசு சார்ந்த தொழில்கள் கிடைக்கும்.

### வைகாசி

வீண் விவகாரங்களால் வருவாய் இழக்கும் சந்தர்ப்பம் அதிகம். நம் பிக்கை, நாணயம்மிக்க நண்பர்கள் கிடைப்பார்கள்.

### ஆனி

சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். பிரயாணங்கள் அதிகம் இருக்கும்.

(நாளை சிங்கராசி தொடரும்)

# நிரந்தர நியமனம் வழங்கப்படாவிட்டால் மூன்றாம் தவணையிலிருந்து பகிஷ்கரிப்பு

## வவுனியா பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் எச்சரிக்கை

நிரந்தர நியமனம் வழங்காவிடில் மூன்றாம் தவணைமுதல் பாடசாலை களுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் இறங்கப்போவ தாக, வவுனியா மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தெரிவித்துள் ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் சேவை யாற்றிக் கொண்டிருக்கும் இவர்கள், நிரந்தர நியமனம் வழங்குவதற்காக க.பொ.த. சாதாரணதரத்தில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தியும், க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களும், நேர்முகப் பரீட்சையில் ஏற்கனவே தோற்றியி ருந்தனர். இவர்களுக்கு நியமனம் வழங்க இதுவரை எந்தவித நடவ டிக்கையும் எடுக்கப்படவில்லை.

வவுனியா மாவட்டத்தில் 328 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆளணி உள்ளபோது, 80 நிரந்தர ஆங்கில ஆசிரியர் மாத்திரமே சேவை செய் கின்றனர். 100 இற்கும் அதிகமான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களே சேவையில் உள்ளனர்.

எனவே, கடந்தகால சேவையி னைக் கருத்திற்கொண்டு தமக்குக் குறுகியகாலத்திற்குள் நிரந்தர நிய மனம் வழங்கப்படாத பட்சத்தில், மூன்றாம் தவணை ஆரம்பத்திலி ருந்து தமது சேவையினை இடை நிறுத்திக் கொள்ளவேண்டிய துர்ப பாக்கியநிலைக்குத் தள்ளப்படு வோம் என, வவுனியா மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (122)

## 'கோபுரம்' இதழ் வெளியானது

இந்து சமய, கலாசார அலுவல் கள் திணைக்களத்தின் தகவல் வெளியீடான 'கோபுரம்' இதழின் ஆனி மாத இதழ் வெளியிடப்பட்டுள்ளது

இவ்விதழில், இரண்டாவது உலக இந்து மாநாட்டுச் செய்திகள், திணைக்களச் செய்திகள், ஆன்மீகக் கட்டுரைகள் என்பன இடம்பெற்றுள் ளன.


# வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

## ஐந்தாவது அகவையில்



பெயர் : யோ.சுலோஜனா,
முகவரி: G.P.S வீதி, கல்வியங்காடு.

## ஐந்தாவது அகவையில்

பெயர் : க.ரஜிந்தன்,
முகவரி: மகாத்மா வீதி, நெல்லியடி.



## ஆறாவது அகவையில்



பெயர் : கு.அஜிந்தன்,
கலுக்கை, கரணவாய் கிழக்கு, கரணவாய்.

## ஆறாவது அகவையில்

பெயர் : பா.மதனீதா,
முகவரி: பிரம்படி லேன், கொக்குவில்.



## எட்டாவது அகவையில்



பெயர் : ம.கேசவன்,
முகவரி: சிதம்பர நிலையம், துன்னாலை.

## எட்டாவது அகவையில்

பெயர் : L.வேணுஜா
முகவரி: அணந்தபுரம் கிளிநொச்சி



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------

முகவரி :------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------

பெற்றார் ஒப்பம்



Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

இதுவரை நடைபெற்று முடிவடைந்த ஒலிம்பிக் போட்டிகளில், 2000 ஆம் ஆண்டில் சிட்னியில் நடைபெற்ற போட்டிகளின் ஆடம்பரம் எதிலுமே இல்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அந்த நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்ச்சிகளில் - ஒரு சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலியாவிற்குப் புகழ்சேர்த்த அற்புதமான பெண்கள் கூட்டமொன்று ஒலிம்பிக் தீபத்தை நோக்கி வந்தது. அவர்களுள் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றியவர் அவுஸ்திரேலிய தடகள வீராங்கனை கெத்தி பிறீமன் (**Cathy freeman**). இவருக்கு ஏன் இந்தளவு முக்கியத்துவம். ஏனெனில், அவுஸ்திரேலியா இன்று வெள்ளை இனத்தவரின் பிடியில் இருந்தாலும், அவுஸ்திரேலிய மண்ணின் மைந்தர்கள் **ABORIGINES** எனப்படும், அவுஸ்திரேலிய மண்ணின் மைந்தர்கள்தான, அந்த மக்களின் புதல்விதான் கெத்தி. இவர் பற்றிய செய்திகள் தற்போது முக்கியம்பெறக் காரணம் இருக்கிறது. இந்த சிட்னி ஒலிம்பிக்கில் 400m ஓட்டத்தில் தங்கம்வென்ற பெண்மணியான இவர் - தான், ஓட்டப்போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.



## நீ எங்களில் ஒருத்தி!

அவுஸ்திரேலிய மக்கள் - இவரை மிக உயர்வாக நோக்குகிறார்கள். இவர்தான் அவுஸ்திரேலிய ஆதிக்குடிகள் பற்றி, வெள்ளை இன மக்களின் மனத்தில் ஒரு சிந்தனையை ஏற்படுத்தியவர் என் கிறார்கள் விமர்சகர்கள். அதாவது, 1994 ஆம் ஆண்டு கொமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்றதும், தன்நாட்டின் தேசியக் கொடியுடன் தன் இனத்தின் கொடியையும் (**ABORIGINAL FLAG**) சமமாகப் பிடித்தபடி மைதானத்தை வலம் வந்தார். இந்தச் செயல் இருபக்கக் கருத்துக்களை உருவாக்கினாலும் கெத்தி பீறிமன் அவுஸ்திரேலியரால் நேசிக்கப்பட்டார்.

# இவர் நட்சத்திரம்

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் பாரிஸ் உலக சாமபியன்ஷிப் போட்டிகளில் - அஞ்சலோட்டத்தில் இவர் கலந்து கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், தற்போது 400m மற்றும் அஞ்சலோட்டம் இரண்டிலும் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அறிவித்துள்ளார் கெத்தி. ஓடுகின்ற தாகம் வெகுவாகத் தணிந்துவிட்டது என்று கூறும் கெத்தி பிறீமன், பத்து வயதிலிருந்தே ஒலிம்பிக் தங்கத்தைக் கனவுகண்டவர். வெறுங்காலுடன் ஆற்றங்கரைகளில் ஓடி, தன்னைப் புடமிட்டுக் கொண்டவர். தனது 27 ஆவது வயதில்- ஒரு இலட்சத்துப் பன்னிரண்டாயிரம் ரசிகர்கள் முன்னிலையில் தங்கம்வென்று, கனவை நனவாக்கினார். அவுஸ்திரேலிய சிட்னி ஒலிம்பிக் போட்டிகளின் உன்னத சந்தர்ப்பம் என்று அந்த நிகழ்வு **IAF** இனால் பதியப்பட்டது.

1990 ஆம் ஆண்டில் கொமன்வெல்த் அஞ்ச லோட்டத்தில் (**4 x 100m**) இவர் தங்கம் வென்றபோது, வெறும் பதினாறு வயதுப் பள்ளி மாணவிதான். 1997, 1999 ஆம் ஆண்டு உலக சாம்பியன் பட்டம் வென்றார் (400m) இவர். 1992 ஆம் ஆண்டில் பார்சலோனா ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொண்ட போது, இவர் **ABORIGINE** இனத்திலிருந்து இத்தகைய நிகழ்வில் கலந்துகொண்ட முதல் அவுஸ்திரேலியராகினர். 2002 ஆம் ஆண்டில் மான்செஸ்ரர் - கொமன்வெல்த் போட்டிகளில் தங்கம் வென்றபோது, இவரின் கணவர் கடும் சுகவீனமுற்றிருந்தார். ஆனால், அதையும் மீறிச் சாதனை படைத்தார் கெத்தி பிறீமன்.

இன்று எதிர்பாராதவிதமாக அவரின் ஓய்வுச் செய்தி வந்திருக்கிறது. ஆனால், அவர் தடகள ரசிகர்களின் மனதில் நீங்காத இடம்பெற்றுவிட்டார். எமது பார்வையில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தின் பெண்மணி ஒருவர் - இந்தளவு தூரம் உலகப்புகழ் பெற்றது மட்டுமன்றி, அவுஸ்திரேலிய பெரும்பான்மையினர் முக்கியத்துவம் கொடுத்தேயாகவேண்டிய நிர்பந்தத்தை உருவாக்கியவர் என்ற வகையில், இந்தப் பெண்மணிக்கு எங்கள் மதிப்பு என்றும் இருக்கும். தன்னை, தன் இனத்தை எந்தச் சந்தர்ப்பத்திலும் மறக்காத, உயிரிலும் மேலாக மதிக்கின்ற கெத்தி பிறீமன் எல்லோருக்கும் ஒரு ஆதர்சம். ஆற்றங்கரையில் வெறுங்காலுடன் ஓடிய கெத்தி பிறீமனின் கால்கள் தங்கக் கால்களல்லவா?

சிந்தியா.

# விளையாட்டு அரங்கம்

## தன்னம்பிக்கை நிறைந்தவர்

ஸ்ரீவ்வோ பங்களாதேஷ் அணியைக் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், அவர்களைத் தலைதூக்கவும் விடவில்லை. அவர்கள்மீது - அவர் கொண்ட மேலாதிக்கம் ஸ்ரீவ்வோவின் பெருமைகளுக்கு மேலும் பெருமைசேர்க்கும் சாதனை வரிசையையும் உருவாக்கிவிட்டது.

இதுவரை அதிகூடிய டெஸ்ட்களாக முப்பத்தாறு டெஸ்ட் போட்டிகளை வென்று, முதன்மையாக இருந்தவர் - மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவராக இருந்த கிளைவ் லொயிட். அந்தச் சாதனையை டார்வின் மைதானத்தில் தனது ஐம்பதாவது டெஸ்ட்டில் (அணித்தலைவராக) ஸ்ரீவ்வோ முறியடித்தார். அத்தோடு இந்த ஆட்டத்தில் பெற்ற சதத்தோடு, சச்சின் டெண்டுல்கரின் முப்பதோராவது சதத்துடன் தன்னைச் சமப்படுத்திவிட்டார். சாதனைச் சதங்களாக இன்னமும் இருப்பது சுனில் கவாஸ்கர் பெற்றுக்கொண்ட முப்பத்து நான்கு சதங்களாகும். இன்னொரு புறம் எல்லா டெஸ்ட் விளையாடும் நாடுகளுக்கெதிராகவும் சதம் அடித்தவர் என்ற பெருமையையும், தென்னாபிரிக்க அணியின் கெரி கேர்ஸ்ரனுக்கு அடுத்ததாக ஸ்ரீவ்வோ பெற்றுக்கொள்கிறார். ஸ்ரீவ்வோ இங்கிலாந்துக்கு எதிராக பத்துச் சதங்கள், மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஏழு சதங்கள், இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக் கெதிராகத் தலா மூன்று சதங்கள், நியூசிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்க நாடுகளுக்கு எதிராகத் தலா இரண்டு சதங்கள், சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகளுக்கு எதிராக ஒவ்வொரு சதம் என்று தன் கணக்கில் சேர்த்துள்ளார். தற்போது இவருக்கு வயது முப்பத்தெட்டு. இன்னொரு டெஸ்ட் பங்களாதேஷுடன் இருக்கிறது.



அனுமதித்தால் ஆச்சரியங்கள் பல...

இதேவேளை, இந்தியாவை டெஸ்ட் தொடர் ஒன்றில் இந்தியாவில் வைத்துத் தோற்கடிக்கவேண்டும் என்பது ஸ்ரீவ்வோவின் அவா. ஆனால், இந்த டிசம்பரில் இந்தியாவை - அவுஸ்திரேலியாவில்தான் அவுஸ்திரேலிய அணி சந்திக்கப்போகிறது. அப்பொழுதும் ஸ்ரீவ்வோ தலைவராக இருப்பாரென்று நம்பலாம். மோதிரவிரல் சத்திர சிகிச்சை ஒன்றுக்குப் பின்னர் தயார் நிலையில் இருக்கும் சச்சின் - 31 சதங்கள், 8811 ஓட்டங்கள் என்ற நிலையில் இருப்பவர். வயது, சச்சினுக்கு 30 மட்டுமே. இதேவேளை, விளையாடப்போவதோ நான்கு டெஸ்ட் ஆட்டங்கள். இந்த நிலையில் ஆர்வத்துக்குரிய விடயங்கள் உண்டு. இந்த டெஸ்ட் போட்டிகள் சச்சின் எதிர் ஸ்ரீவ்வோ ஆக இருக்குமா என்பதுதான். ஏனெனில், இருவரும் கவாஸ்கரின் 34 சதம் என்னும் இலக்கை நெருங்கிக்கொண்டிருக்கிறார்களல்லவா...?

**- சரண்யன்**

# செல்வாக்கு ஆச்சரியம் அல்ல

**டே**விட் பெக்கம், ஸ்பானியாவின் றியல் மட்றிட் அணிக்குச் சொந்தமாகியதைத் தொடர்ந்து, தற்போது பிறேசில் நாட்டின் றொனால்டின்ஹோ, இன்னொரு ஸ்பானிய அணியான பார்சலோனாவிற்கு விளையாட ஒப்பந்தமாகியுள்ளார். இதற்கு முன் இவர் விளையாடிய அணி சென்ட் ஜேர்மேனின். இது பிரான்ஸ் நாட்டின் ஒரு அணி. இவரது மாற்றத் தொடரில் கைமாற்றப்பட்ட பணத்தொகை ஏறத்தாழ 28 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து, 34 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில்வரும் என்று கருதப்படுகின்றது. இவர் முதன்முதலாகப் பார்சலோனா கழகம் சார்பில் நோகாம் மைதானம் வந்தபோது, இவரை வரவேற்கத் திரண்டிருந்த ரசிகர் கூட்டம் முப்பதினாயிரம் பேர். இருபத்து மூனறு வயது மட்டுமே ஆகும் இந்தப் பிறேசில் தேசிய அணியின் வீரர் "இந்த நிமிடம் என் வாழ்க்கையில் உணர்ச்சிபூர்வமானது. ஏனெனில், நான் சிறுவனாக இருந்தபோதே, பார்சலோனா கழகத்துக்கு ஆடவேண்டும் என்று கனவுகண்டேன் இன்று அது நிறைவேறிவிட்டது" என்கிறார்.



தங்கக் கால்கள்



றொனால்டின்ஹோ

இதேவேளை, மான்செஸ்ரர் யுனைட்டட் அணி மற்றும் றியல் மட்றிட் அணியிலிருந்து கிடைத்த அழைப்புக்களை மறுத்து, பார்சலோனா அணியில் இணைந்தமை பற்றிக் குறிப்பிடும்போது -

பார்சலோனா கழகத்தில் அதிதிறமைவாய்ந்த றொமா ரியோ, றொனால்டோ, றிவால்டோ போன்றோர் விளையாடினார்கள். அவர்களின் பின்னால் நானுமே பார்சலோனாவில் இணைந்துள்ளேன் என்கிறார் றொனால்டின்ஹோ. பார்சலோனா ஆதரவாளர்களை, ரசிகர்களை ஏமாற்றமாட்டேன். அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் வண்ணம் மைதானத்தில் என் திறமையைக் காட்டுவேன் என்றும் சொல்கிறார் றொனால்டின்ஹோ.

சுதா

# கழுத்தறுப்பா - குளூஸ்னருக்கு

தென்னாபிரிக்க அணியில் லான்ஸ் குளூஸ்னர் இல்லை என்பது அதிர்ச்சியான செய்தியாகவே இருந்தது. 1999 இல் உலகக்கிண்ண ஆட்டத்தொடர் நாயகன், ஒருநாள் விற்பன்னர். இருவகைக் கிரிக்கெட்டிலும் கேள்விக்கே இடமில்லாது, அணியில் அங்கத்துவம் பெறுபவர். உலகக்கிண்ணம் 2003 இல் பின் எத்தனையோ கிரிக்கெட் வீரர்களுக்கு ஏற்பட்ட கதி இவருக்கும் ஏற்பட்டது. ஆனால், இவர் ஒருவரே தனக்கு அநீதி இழைக்கப்பட்டதாக முறைப்பாடுசெய்து நீதி கேட்கிறார். **CCMA** என்று அழைக்கப்படும் இணக்க மற்றும் மத்தியஸ்த சபையிடம் தன் முறைப்பாட்டை முன்வைத்திருக்கிறார் குளூஸ்னர். குளூஸ்னர் தன் முறைப்பாட்டில் பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரில் தனக்கு ஓய்வே தவிர அணிநீக்கம் அல்ல என்று அதிகாரிகள் கூறியதாகவும், இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் தனக்குரிய இடம் வழங்கப்படும் என்றும் கூறியதாகவும் கூறும் அவர் - தற்போது தனக்கு அநீதியும், பொருளாதார நட்டமும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்.



திட்டமிட்ட சதி

தான் இங்கிலாந்தின் கவுண்ரி அணியின் ஒப்பந்தங்களைக்கூட ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை தந்த வாக்குறுதியே என்கிறார் குளூஸ்னர். ஆனால், இன்று அதுவும் இல்லை, இதுவும் இல்லை என்றாயிற்று என்கிறார். எனவே, தன்னை நீக்கியமை கிரிக்கெட் காரணங்களுக்காக அன்றி, வேறு காரணங்களுக்காகவும் இருக்கக்கூடும் என்கிறார் அவர். மேலும், கிரிக்கெட்டுக்கு அப்பால் தான் பிழைவிட்டிருந்தால், அதற்காக ஒழுக்காற்றுக் குழுவின்முன் தன்னை நிறுத்தியிருக்கவேண்டும். அப்படியும் செய்யவில்லை என்கிறார். எனவே, நிலைமைகளைப் பார்க்கும்போது, ஏதோ விஷமங்கள் குளூஸ்னருக்கு எதிராக நடைபெறுவதுபோலவே தோன்றுகிறது. கிரீம் ஸ்மித் தென்னாபிரிக்க அணியின் தலைவராக நியமிக்கப்பட்டமையே பெரும் அதிருப்தி அலைகளை ஏற்படுத்தியிருந்தது. அத்தோடு மூத்த வீரர்கள் - ஷோன் பொல்லொக் போன்றோர் - குளூஸ்னரை நடத்திய விதம் மற்றும் குளூஸ்னர் பற்றிய மிக அவதூறாகக் கூறிய கருத்துக்கள் எல்லாம் பல்வேறு ஊகங்களை ஏற்படுத்துகின்றன. குளூஸ்னர் எடுத்துள்ள நடவடிக்கை, குளூஸ்னருக்கு நன்மைதருமா என்று தெரியவில்லை. ஆனால், பொதுவான ஒரு பார்வையில் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சரியான பாதையில்தான் போகிறதா என்றொரு கேள்வியை விமர்சகர்கள் எழுப்புகிறார்கள். எதிர்காலம் இதற்கும் பதில் சொல்லும்...!

செந்தூரம்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு

தற்போது உலகளாவியரீதியில் டெனிஸ் விளையாட்டின் மூலம் ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறார்கள் கறுப்பினச் சகோதரிகளாகிய வீனஸ் மற்றும் செரினா வில்லியம்ஸ், வீனஸ். 1980 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ஆம் திகதி பிறந்தவர். இவருடைய இளைய சகோதரி செரினா. இவர்கள் இருவரும் 10 வயதி



வீனஸ்
ஆடம்பரப் பிரியை

லேயே டெனிஸ் உலகில் காலடி எடுத்து வைத்தவர்கள். இவர்கள் இருவரும் பெண்களுக்கான ஒற்றையர் மற்றும் இரட்டையர் போட்டிகளில் பங்கேற்று வெற்றிவாகை சூடியிருக்கின்றார்கள். இவர்கள் பிறந்த இடம் லைன்வூட், கலிபோர்னியா. இவர்கள் அமெரிக்க நாட்டுக்காக டெனிஸ் உலகில் முடிசூடா ராணிகளாகத் திகழ்கின்றார்கள். இவர்கள் எல்லோருமாக 5 பெண் சகோதரிகள். இவர்களுடைய தந்தையார் ரிச்சட் வில்லியம்ஸ். தாய் ஒறாசென்ஸ் வில்லியம்ஸ். தந்தையார் 1991 ஆம் ஆண்டு தன்னுடைய பிள்ளைகளின் டெனிஸ் ஆட்டத்தைப் பார்த்துவிட்டு, இவர்கள் எப்பொழுதாவது மிகச்சிறந்த டெனிஸ் நட்சத்திரங்களாக வருவார்கள் என்று கூறியிருந்தார். செரினா மற்றும் வீனஸ் உடைய முதல்குரு ரிக்கி மாக்சி. ஆனால், இவர்களுடைய தந்தையும், இவர்களுடைய ஒரு வகையான பயிற்றுநர் என்றே கூற வேண்டும். 1994 ஆம் ஆண்டுக்குப் பின்பு, உலக டெனிஸ் சம்மேளனம் 14 வயது நிரம்பாத பிள்ளைகளைப் போட்டிகளுக்கு அனுப்புவதில்லை எனத் தீர்மானித்திருந்தமையால், வில்லியம்ஸ் சகோதரிகள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் மட்டுமே கலந்துகொள்ள வேண்டியநிலை ஏற்பட்டது. வீனஸ் வில்லியம்ஸ்" டைய முதலாவது போட்டியாக ஒக்லாண்ட் வங்கியால் ஒழுங்குசெய்யப்பட்ட போட்டி கலிபோர்னியாவில் இடம்பெற்றது. இவருடன் ஆடியவர் யார் தெரியுமா? அப்போதைய உலகத்தின் 2 ஆம் நிலை டெனிஸ் நட்சத்திரமாக விளங்கிய அரான்ஸா சான்ஸஸ் விக்காரியோ. அன்று அவரிடம் வீனஸ் தோற்றாலும், அந்தப் போட்டியில் எதிராளியைத் திக்குமுக்காட வைத்தார் என்பதுதான் உண்மை. பின்பு, இவர் படிப்பில் கூடிய கவனம் செலுத்தினார். 1997 ஆம் ஆண்டு பிரான்ஸின் ஓபன் டெனிஸ் போட்டியில் பங்குபற்றினார். பின்பு அமெரிக்கன் ஓபன் டெனிஸ் போட்டியில் பங்குபற்றினார். இதில்தான் இவர் முதற்தடவையாக இறுதிப் போட்டிக்குத் தெரிவானார். அதற்குமுன் 1957, 1958 ஆம் ஆண்டுகளில் கறுப்பினப் பெண் அல்தியா கிப்சன் இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்.

அதற்குப் பின்பு தெரிவான கறுப்பினப் பெண் வீனஸ்தான். இறுதிப் போட்டியில் இவர் மார்ட்டினா ஹிங்கிஸிடம் தோற்றுப்போனார். பின்பு, 1998 ஆம் ஆண்டு ஹிங்கிஸை சிட்னியில் வைத்து ஒரு போட்டியில் வென்றார். அது அவுஸ்திரேலியன் ஓபன் டெனிஸ் போட்டி. அங்கு ஒற்றையர் ஆட்டத்தில் தோற்றாலும், இரட்டையர் கலப்பு ஆட்டத்தில் ஜஸ்ரின் கிம்லஸ்டொப் என்பவருடன் சேர்ந்து வெற்றிவாகை சூடினார். 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதற்தடவையாக WTA ஒற்றையர் பட்டத்தை வென்றார். இவர், பிரபல நட்சத்திரமான ரஷ்யாவைச் சேர்ந்த அன்னா கோர்னிக்கோவாவினை வென்றார். அப்போது இவர் 10 ஆவது இடத்திலிருந்தார். ப்ரெஞ்ச் ஓபன் கால் இறுதி, விம்பிள்டன் இறுதி, அமெரிக்க ஓபன் அரையிறுதி ஆகியவற்றுக்குள் நுழைந்து தன்னிலையை வலுப்படுத்திக்கொண்டார். இதற்கிடையில் இவருடைய எதிரியாகச் சகோதரி செரினா நுழைந்தார்.

2002 ஆம் ஆண்டு ப்ரெஞ்ச் ஓபன் இறுதிப் போட்டியில் வீனஸினை, செரினா தோற்கடித்தார். குடும்பச் சண்டையா தொடர்ந்து செரினாவிடம். அமெரிக்க, விம்பிள்டன் ஆகிய ஓபன் இறுதிப் போட்டிகளில் வீனஸ் தோற்



செரினா
மின்னும் தாரகை

றுப்போனார். தற்போதைய நிலையில் செரினா முதலிடம். வீனஸ் 2 ஆம் இடத்தில் நிற்கின்றார். ஆனால், வில்லியம்ஸ் சகோதரிகள் மிகச்சிறந்த நண்பிகள் போலத்தான் பழகுகின்றார்கள். இரு வருக்கும் தாய் என்றால் உயிர். தற்போது இருவரும் உயர்கல்வியை முடித்துவிட்டுப் புளோரிடா கலையகத்தில் வடிவமைப்புப் பற்றிய உயர்கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்கள்.

**BLACK IS VALUABLE!**

P.N.சுதர்சன்

# பலருக்குச் சுடத்தான் செய்யும்

சிட்னி ஒலிம்பிக் போட்டிகளில் 100m வெண்கலப் பதக்கம் வென்றவர் சுசந்திகா. இவரது ஓட்டத்தைப் போலவே, கருத்துக்களும் வேகமாக வெளிவரும். சுசந்திகா இத்தன்மையினாலேயே பல சோதனைகளைச் சந்தித்தவர். இருந்தும் இவரது சில கருத்துக்கள் தொடர்பில்



அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்

உண்மைத்தன்மையை மறுப்பதற்கில்லை என்கிறார்கள் விமர்சகர்கள். இதில் ஒன்றுதான் பயிற்றுநர்கள் பற்றிய சுசந்திகாவின் கருத்து. அவர் கருத்துத் தெரிவிக்கும்போது, ஒருசில ஆசிய நாட்டுப் பயிற்றுநர்கள் பற்றிக் காட்டமான கருத்துத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்தபோது - வெளிநாட்டுப் பயிற்றுநர்களின் இயல்புகள் பற்றிக் கூறுகிறார். மேற்கத்தைய பயிற்றுநர்கள் - பயிற்றுநர் என்ற பதவிக்கப்பால் இன்னும் சில பாத்திரங்களை வகிக்கின்றார்கள். ஒரு நண்பனாக, வெளிப்படையாகக் கருத்துக் கூறும் ஆலோசகராக, அத்தோடு தரம் வாய்ந்த நெறிப்படுத்துபவராக இருக்கிறார். அவர்கள் தங்கள் பணியைப் பணத்தினால் மட்டும் வரையறுத்துக் கொள்வதில்லை. ஏன் எங்கள் உடைகள், உபகரணங்கள் அடங்கிய பொதியை (BAG) காவிச்செல்லவும், அவர்கள் தயக்கங்காட்டுவதில்லை. இவற்றை ஆசியப் பயிற்றுநர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். இத்தகைய அணுகுமுறையின்மூலமே ஆசியாவில் சிறந்த தடகள வீரர்களை உருவாக்க இயலுமென்கிறார் சுசந்திகா. இவர் ஆசியா, ஆசியா என்று கூறுவது தனது தாயகத்தில் தனக்கேற்பட்ட துயரங்களை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதுபோலத் தோன்றுகிறது.

இறுதியாக இது தொடர்பில் கருத்துக் கூறும்போது - அதைச் செய்யாதே, இதைச்செய்யாதே என்று வெருட்டுவதிலும், கூட்டுக்குள் இருந்து நேராக தடத்தில் போய்நின்று உன் நிகழ்வை ஆரம்பி என்று சொல்வதெல்லாம் பெரும் அழுத்தத்தைத்தான் கொடுக்கும் எனறு கூறுகிறார். இதிலிருந்து சுசந்திகா, தனது அமெரிக்கப் பயிற்றுநர் ரோணி கம்பெல் மீது எவ்வளவு உயர்வானதொரு அபிப்பிராயம் வைத்திருக்கின்றார் என்பதும் தெரிகிறது.

பொதுவாக ஆசிய நாடுகளில் குறிப்பிடத்தக்க - பல்வேறு விளையாட்டுத்துறைகளுக்கும், மேற்கத்தைய பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது. இதற்குச் சாதகபாதகமான கருத்துக்கள் இருந்தாலும், சர்வதேசரீதியில் இடம்பிடிக்க வேண்டுமாயின், மேற்கு நாடுகளை நாடுவதே சிறந்தது என்ற கருத்து மேலோங்கி நிற்கிறது.

உள்ளூர்ப் பயிற்றுநர்கள் ஏன் சோபிக்க முடிவதில்லை என்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்போலத் தோன்றுகிறது. பயிற்றுநர்கள் என்பவர்கள் அத்துறை சார்ந்த மற்றும் அதனோடு சேர்ந்ததான துறைகளில் உயர் பட்டங்கள் பெற்றவராக இருக்கிறார்கள். அநேகமானோர் தம்துறைகளில் களங்கண்டவர்களாக இருக்கிறாகள். ஆழ்ந்த புலமை என்பது, இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது. இது ஒருபுறமிருக்க, அவர்களுக்கும்-எமது நாட்டுப் பயிற்றுநர்களுக்கும் TECHNOLOGY GAP பெரிதாகவே இருக்கிறது. இன்னொன்று நவீன வசதிவாய்ப்புகள் இன்மை.

இதேவேளை, இலங்கை போன்ற நாடுகளில் பல்வேறு விளையாட்டுத்துறைகளின் நியமனங்கள் பற்றிய ஆய்வுகள், கருத்துக்கள் எந்தளவிற்குத் துறைகளின் விருத்திக்கான நியமனங்களாக இருக்கின்றன என்றொரு அதிர்ச்சியான வினாவும் எழுகின்றது. அது மட்டுமன்றி, அப்படி இப்படி நியமனங்கள் பெற்றுக்கொண்டவர்கள் கையில் சவுக்கை எடுத்துக்கொண்டு, தன்னில் இல்லாததையெல்லாம் அதிகாரத்தில் உண்டு என்பதுபோலப் பாவனை செய்வது பற்றியும் - விளையாட்டு விமர்சகர்கள் விலாவாரியாக எடுத்துக்காட்டுகிறார்கள். இந்நிலையில் - கிரிக்கெட் துறையில் டேவ் வட்மோர் பற்றியும் நினைக்கத் தோன்றுகிறது.

அவர், இலங்கையின் கிரிக்கெட் உயர்வுக்குக் காரணமாக அமைந்தவர். ஆனால், காலப்போக்கில் படிப்படியாக இலங்கைத் தன்மைகள் அவரைப் பாதித்ததால்தான், அவரது பெயரும் சிறிது களங்கமாயிற்று என்ற கருத்தும் உண்டு.

எனவே, மொத்தத்தில் பார்க்கும்போது, 'பயிற்றுநர்கள்' என்பவர்களுக்கும் "பயிற்றுநர் பதவி" வகிப்பவர்கள் என்பவர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி இருக்கிறதுபோலவே தோன்றுகிறது.

- மக்டலின் மரியா

# நல்லதொரு வாய்ப்பு

இங்கிலாந்தின் கவுண்ரி அணிகளில் அங்கம்வகிக்க விரும்பும் கிரிக்கெட் வீரர்கள் அநேகம்பேர். இதற்கான காரணம் - சர்வதேசத்தரம் வாய்ந்த அனுபவங்களை அங்கு பெற்றுக்கொள்ளமுடியும் என்பதேயாகும். இந்தவகையில் நல்ல வருமானம் கிடைப்பதென்பது இரண்டாவது காரணம். எது எவ்வாறாயினும் ஆசிய கிரிக்கெட் நாடுகளைப் பொறுத்தவரை, பாகிஸ்தானிய கிரிக்கெட் வீரர்கள் - இங்கிலாந்துக் கவுண்ரி கிரிக்கெட் விளையாடும் அளவிற்கு, வேறெந்த நாட்டின் வீரர்களும் கலந்துகொள்வதில்லை. அரவிந்த டி சில்வா கருத்துக் கூறும்போது - கவுண்ரிகளில் விளையாடும் பல வெளிநாட்டு வீரர்களை விட, இலங்கையில் தரங்கூடிய வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால், திறமை மட்டும் காணாது. இவர்களைக் கவுண்ரிகளில் விளையாடச் சந்தர்ப்பம் ஏற்படுத்த இலங்கையர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். இந்த நிலையில் தற்போது முரளி, கென்ட் அணிக்காக விளையாடத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதுகூட இவருக்கு அணியின் முதன்மைத் தெரிவல்ல. முதலில் அன்ரூ சிமன்ஸ் (அவுஸ்திரேலியா) தெரிவுசெய்யப்பட்டு, அவருக்குத் தன் நாட்டின் அலுவல்கள் இருந்ததால், பின்னர் மொகமட் சமி (பாகிஸ்தான்) தெரிவுசெய்யப்பட்டு, அவரும் தன் அணிக்காக நாடுதிரும்ப, அந்த இடமே மூன்றாவதாக முரளிக்குக் கிடைத்துள்ளது.



செல்வாக்கும் வேண்டும்

உண்மையில், முதல் இருவரைவிட WORLD CLASS பந்துவீச்சாளர் முரளி என்பது மறுக்கப்பட முடியாது. 1999 இல் லங்காஷயர் கவுண்ரிக்காக முன்னர் முரளி விளையாடியிருந்தார். முதல் ஒப்பந்த காலத்தில் ஏழு ஆட்டங்களில் அறுபத்தாறு விக்கெட்டுக்களையும், இரண்டாவது காலப்பகுதியான 2001 இல் ஏழு ஆட்டங்களில் ஐம்பது விக்கெட்டுகளும் வீழ்த்தியிருந்தார். இதற்கு முன்னர் அரவிந்த டி சில்வா 1998 - 1999 இல் கென்ட் கவுண்ரிக்காக அபாரமாக ஆடியிருந்ததும் நினைவுகூரத்தக்கது. எது எப்படி இருந்தாலும், இலங்கை வீரர்கள் கூடுதலாக கவுண்ரிகளில் விளையாட வேண்டுமாயின் இலங்கை - இங்கிலாந்து வாழ் பல்துறை சார்ந்தோரின் செல்வாக்கு, விடாமுயற்சி என்பன இருந்தாலே சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என்பதுமட்டும் உண்மை.

ரோஜா.

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*வகை அறச் சூழாது எழுதல் பகைவரைப்*
*பாத்திப் படுப்பதோர் ஆறு.*

*-திருக்குறள்.*

# நமது நோக்கு

## எதுவும் சர்ச்சைதான் அங்கே...!

இடைக்கால நிர்வாகமொன்றை வட - கிழக்கில் ஏற்படுத்துவதற்காக, அரசாங்கம் - விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்த திட்டவரைபுக்கான, பதில்களோ எதிர்வினைகளோ விடுதலைப் புலிகளிடமிருந்து எதுவும் வெளிவராத நிலையில்-

இந்தத் திட்டவரைபு பற்றிய சர்ச்சைகள் புயலாகத் தாக்கி - தென்னிலங்கை அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி, அவரது பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிங்கள அமைப்புக்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனப் பலதரப்புக்களிடமிருந்தும் - இடைக்காலத் திட்டவரைபு பற்றிய உணர்வலைகள் ஏகத்துக்கும் வெளிக்கிளம்பியியுள்ளன.

திட்டவரைபின் உள்ளடக்கம் பற்றித் தெரிந்து சிலரும், கசிந்த தகவல்களைக் கொண்டு சிலரும், அது பற்றி எதுவுமே தெரியவராத நிலையில் - வழக்கமான தமது எதிர்ப்பைக் காட்டுபவர்கள் பலருமாக - திட்டவரைபின் பல்வேறு பரிணாமங்களும் அக்குவேறு ஆணிவேறாக அலசப்படுகின்றன.

அரசாங்கம் திட்டவரைபைத் தயாரித்தது முதல் - அது விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப்பட்டது மற்றும் கொண்டு செல்லப்பட்ட வழிமுறை ஈறாக -

திட்டவரைபில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள், செயற்பாடுகள், அங்கத்துவம் பற்றியெல்லாம் - நாளொன்றுக்கு சராசரியாக மூன்று அல்லது நான்கு அறிக்கைகளை ஊடகங்களில் பார்க்கக்கூடிய நிலைமை இன்று உருவாகியிருக்கிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால் - அரசாங்கம் அனுப்பிய திட்டவரைபுக்கெதிராகவே மிகப்பெரும்பான்மையான கருத்துக்கள் வெளியாகி வருவதுதான்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படைகள் யாவுமே - ஆகக் குறைந்த அதிகாரப் பரவலாகத்தை அல்லது தமிழர்களுக்கான அதிகாரங்களை அரசாங்கம் வழங்கிவிடுமென்ற அச்சத்தால் எழுந்துவருவதும் கவனிக்கத்தக்கதொரு விடயமாகிறது.

அண்மையில் - இடைக்கால நிர்வாக வரைபு பற்றிய விமர்சனங்களை அல்லது அங்கீகரித்தலைச் சொல்ல வேண்டிய தரப்பாக விடுதலைப் புலிகளே இருக்க -

வெளியிலுள்ள இவர்கள் அனைவரும் - இடைக்காலத் திட்டவரை புக்கு முத்தாய்ப்பு வைத்துவிட முயற்சிப்பதை என்னவென்று சொல்வது?

அரசின் திட்டவரைபு என்பது - தமிழ்மக்களுக்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய போதுமான ஏற்புடைமையைக் கொண்டிருக்கிறதா இல்லையா என்பது தெரியவர முன்பே-

தென்னிலங்கையில் எழும் சர்ச்சைகள் வழக்கமான போக்கிலிருப்பது, தெற்கின் அரசியல் சக்திகள் இன்னமும் மாறிவிடவில்லையோ எனத்தான் எண்ணவைக்கின்றது.

யதார்த்தத்தில் - விடுதலைப் புலிகள் கோரியதன்படி, அரசாங்கம் முன்வைத்திருக்க வேண்டிய இடைக்கால நிர்வாகத் திட்டமானது - தமிழ்மக்களுக்குரிய அரசியல் பொருளாதார அதிகாரங்களையும், வட - கிழக்கில் புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகளைச் செம்மையாக முன்னெடுக்கவேண்டிய ஆள்பரப்பையும் கொண்டிருக்க வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருக்கும்போது -

அரசாங்கம், இப்போது விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்திருக்கும் திட்டமானது அவற்றினை நிறைவுசெய்யப் போதுமானதுதானா என்ற சந்தேகம் கிளம்பியிருக்கும் நிலையில் -

தெற்கின் உணர்வலைகள் - எல்லாமே அள்ளிக் கொடுக்கப்பட்டுவிட்டது போலவும், ஏதோ இடைக்கால நிர்வாகம் ஒரு சில நாட்களுக்குள் அமைக்கப்பட்டுவிடும் என்பதாகவும் பரவிவருவது, முதிர்ச்சியற்ற தன்மையைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இது இவ்வாறிருக்க - இடைக்கால நிர்வாக வரைபை- விடுதலைப் புலிகளுக்கு ஒன்றாகவும், ஜனாதிபதிக்கு வேறாகவும் அரசாங்கம் அனுப்பிவைத்திருப்பதாக - பொதுஜன ஐக்கிய முன்னணியிலிருந்து பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு அளிக்கப்பட்ட வரைபில் சொல்லப்பட்ட விடயங்கள், ஜனாதிபதிக்குத் தரப்பட்ட வரைபில் குறிப்பிடப்படவில்லையெனக் கூறியுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி,

திட்டவரைபின் இரகசியத் தன்மையை பாதுகாக்குமாறு பிரதமர், ஜனாதிபதியிடம் விடுத்திருந்த கோரிக்கையை - நாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் நோக்கில் ஏற்க முடியாதென ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இது - திட்டவரைபு குறித்த சர்ச்சையை மற்றுமொரு பக்கமிருந்தும் தொடக்கிவைத்துள்ளது.

தெற்கில் எழுந்துள்ள இந்தச் சிக்கல்கள் திட்டவரைபை விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ - அரசாங்கத்தைப் பெரும் சங்கடத்தில் மாட்டியிருப்பதைத்தான் உணரமுடிகின்றது.

இது -"நந்தவனத்தில் ஒரு ஆண்டி, நாலாறு மாதமாய் குயவனை வேண்டி - கொண்டு வந்தானடி ஒரு தோண்டி, கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என்பதாகவே - தெற்கின் நிலைவரத்தைச் சுட்டி நிற்கிறது.

# அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மீது எதிர்க்கட்சிகள் நிதி மோசடிக் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

அமெரிக்காவில் இலங்கைத் தூதுவராகக் கடமையாற்றி வரும் தேவிந்த ஆர்.சுபசிங்க, தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, மேலதிகமாக - இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்து - அமெரிக்காவிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தைப் புனரமைத்தமை சட்டவிரோதமானது எனக்கூறி -

இதுபற்றி, அரசாங்கம் உடனடியாக விசாரித்து அறிக்கையொன்றை வெளியிட வேண்டும் என்று - எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்தானந்த அளுத்கமகே - இது தொடர்பாக, நாடாளுமன்றத்தில், வெளிவிவகார அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்தின் நிதி இவ்வாறு வீண்செலவு செய்யப்பட்டது பற்றி, அரசாங்கம் உரிய விளக்கம் தரவேண்டுமென, அவர் கேட்டுள்ளார்.

நாடாளுமன்றக் கேள்வி நேரத்தில், வாய்மொழி மூலமாக அளுத்கமகே கேள்வி எழுப்பியிருந்தார்.

அமெரிக்கத் தூதுவர் தேவிந்த ஆர்.சுபசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லம் புனரமைக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட நிதி, அங்கு இலங்கை தொடர்பான நூதனசாலையொன்றை அமைப்பதற்காகவே செலவிடப்பட்டிருக்க வேண்டிய தொகையாகும்.

அப்படியான நிலையில், குறிப்பிட்ட நிதியை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, தனது உத்தியோகபூர்வ இல்லத்தைப் புனரமைப்பதற்கு தேவிந்த ஆர்.சுபசிங்கவுக்கு யார் அனுமதி வழங்கினார்கள் என்பதே பிரச்சினைக்குரிய விடயமாகியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டு உண்மையென நிரூபிக்கப்படும் பட்சத்தில், அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிவரும் சுபசிங்க- இலங்கை அரசாங்கத்தையும், வெளிவிவகார அமைச்சையும் தவறாக வழிநடத்தியிருப்பதாகவே கொள்ளவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இதேவேளை - குறிப்பிட்ட தூதுவர், தனது சொந்த உபயோகத்திற்காக, மாதாந்தம் நான்காயிரம் அமெரிக்க டொலர்கள் செலவில் - தனது வீட்டிற்குத் தேவையான தளபாடங்களைக் குத்தகை அடிப்படையில் பெற்றிருப்பது பற்றியும், "ஹோட்டேல் றிட் பிளாசா" என்ற ஐந்து நட்சத்திர விடுதியில் நாளொன்றுக்கு 500 அமெரிக்க டொலர்களைச் செலவிட்டு நான்கு மாதங்கள் தங்கியிருந்தது பற்றியும் - வெளிவிவகார அமைச்சு விசாரணை செய்யவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே மேலும் கேட்டுள்ளார்.

இதேவேளையில் - அமெரிக்காவில் தனக்கென உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஒன்று இருக்கும்போது - தூதுவர் தேவிந்த ஆர்.சுபசிங்க, அங்கு தனியானதொரு வீட்டை வெளிவிவகார அமைச்சின் நிதியிலிருந்து பெறப்பட்ட 9 ஆயிரம் அமெரிக்க டொலரில் வாடகைக்குப் பெற்றுள்ளது பற்றியும், அரசாங்கம் உடனடியாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென, மகிந்தானந்த அளுத்கமகே மேலும் கேட்டுக் கொண்டார்.

# முல்லை கடற்தொழிலாளர் சமாசத்துக்கு 33 ஆளணியினருக்கு அங்கீகாரம்!

முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் பணியாளர்கள் 33 பேருக்கு - ஆளணி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கான அங்கீகாரம் - கடந்த 19 ஆம் திகதி வடக்கு-கிழக்கு மாகாணசபை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என, முல்லை மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் ப.விவேகானந்தம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசம் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு சிரமங்களின் மத்தியில், பணியாளர்கள் கடமையாற்றிவந்தும், இதற்கு ஆளணி அங்கீகாரம் கிடைக்கவில்லை. தற்பொழுது- முல்லை மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பெருமுயற்சியினாலும், மேற்படி சமாசத்தின் பணிப்பாளர் சபையினது முயற்சியினாலுமே இந்த அங்கீகாரம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. (122)

# எஸ்.பியைச் சமாதானப்படுத்த ஏற்பாடான இரவு விருந்து!

## ரணிலும் கலந்துகொண்டார்

அமைச்சரவையில் இருந்து விலகப்போவதாக அண்மையில் அறிவித்திருந்த விவசாய அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவைச் சமாதானப்படுத்தும் முகமாக, வர்த்தகத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக, சுவாரசியமான தகவலொன்று கொழும்பில் வெளியாகியுள்ளது.

இந்த விருந்தில், பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கியதேசியக் கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரம ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தனது அமைச்சிற்குரிய நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம் காட்டப்படுவதாகக்கூறி, எஸ்.பி.திஸநாயக்க பதவியை ராஜினாமாச் செய்த பின்னர் - அவரது கோபத்தை தணிப்பதற்காகவே, இந்த உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டதாக ஐக்கிய தேசிய கட்சி வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

திஸநாயக்கவின் இராஜினாமா விவகாரத்திற்குப் பின்னர், பொதுஜன ஐக்கிய முன்னணியை சேர்ந்த மங்கள சமரவீர, திஸநாயக்கவுடன் பேச்சுக்களை நடத்தி - அவரை மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கொண்டுவருவதற்கு மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்தே,

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர் ரவி கருணாநாயக்க - திடீரென இந்த இரவு விருந்தை ஏற்பாடு செய்து, அவருடனான உறவைச் சுமுகமாக்க முயன்றதாகக் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இணையம் வழியான கற்கைநெறி இலங்கையிலும் அறிமுகமாகிறது!

(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்றிருக்கின்ற இணையம் வழிக்கற்கைநெறி, இலங்கையிலும் அறிமுகமாகவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக - பொருளாதாரத்துக்கான கற்கைகளை இன்ரநெற் வழியே வழங்கி வரும் பிரபல பொருளியலாளரான டக்ளஸ் எச்.ஹல்சார், கொழும்புக்கு வருகைதந்துள்ளார்.

இணையம் வழி கற்கைகளை நடத்துவதற்கு கொழும்பில் இன்ரநெற் கல்லூரி ஒன்றை, E-College என்ற பெயரில் ஆரம்பிக்கவுள்ளதாகவும் - அமெரிக்காவில் கொலராடா மாநிலத்தில் இயங்கிவரும் E-College என்ற நிறுவனத்தின் கிளை நிறுவனமாக அது செயற்படும் என்றும், டக்ளஸ் எச்.ஹல்சார் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக - இன்ரநெற் வழியாகத் தாதியர் பயிற்சி, கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய கற்கை நெறிகள் வழங்கப்படவிருப்பதாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பை தருவதாக உறுதியளித்திருப்பதாகவும் டக்ளஸ் எச்.ஹல்சார் மேலும் தெரிவித்தார்.

இந்த இன்ரநெற் கல்லூரி - இலங்கைத் தீவிலுள்ள பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், சமூகநல மையங்கள், பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள் ஆகியவற்றுடன் தொடர்புகளை வைத்திருக்குமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களை புனரமைப்புச் செய்வதற்கு வெளிநாட்டு உதவி தேவை!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

யாழ்.குடாநாட்டிலுள்ள முக்கியமான துறைமுகங்களான- காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு, வெளிநாட்டு உதவியை எதிர்பார்த்திருப்பதாக துறைமுக, கப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

துறைமுககப்பல்துறை அமைச்சர் ரவூப் ஹக்கீம் இது பற்றித் தெரிவிக்கும்போது, குடாநாட்டிலுள்ள முக்கியமான இந்த இரண்டு துறைமுகங்களையும் புனரமைப்புச் செய்யவேண்டியது ஓர் அவசியமான பணியாகும்.

இந்தத் துறைமுகங்களைப் புனரமைப்புச் செய்வதன் மூலமே, குடாநாட்டிற்கான கடல்வழிப் போக்குவரத்தை இலகுவாக்குவதுடன், அந்தப் பகுதிகளில் வேலையற்றோர் பிரச்சினையினையும் ஓரளவிற்கேனும் குறைத்துக்கொள்வதற்கு வழி காணப்படும்.

இந்த இரண்டு துறைமுகங்களையும் புனரமைப்பதற்கான திட்டம் - ரோக்கியோவில் நடைபெற்ற உதவிவழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

எமது பணி அத்துடன் முடிவடைந்த நிலையில், இனிமேல் வெளிநாடுகள் இந்த இரண்டு துறைமுகங்களையும் புனரமைப்புச் செய்வதற்கான நிதியுதவியை தருவதற்கு முன்வந்தால் மட்டும் நாம் புனரமைப்புப் பணியை ஆரம்பிக்கமுடியும். அதுவரை நாங்கள் பொறுத்திருக்க வேண்டியவர்களாகவுள்ளோம் என்று, ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தின்படி - அநேகமாக மிகவிரைவில் காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகங்களைப் புனரமைப்பதற்கான அனுமதி கிடைத்துவிடும் என்றும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும தெரிவித்தார்.

# சீரழிவுக்கு அழைத்துச் செல்லும் தலைநகர்

கொழும்பு - யாழ்ப்பாணத் தமிழர்கள் நாவில் அடிக்கடி உச்சரிக்கப்படும் பெயர் என்று கூற லாம். தமிழர்கள் மத்தியில், பிரபல்யமான பெயர். தமிழர்களில் சிலர் கொழும்பில் வாழ் வதை விரும்புகிறார்கள். கொழும்பில் வீடு இருப்பதைக் கௌரவம் என்று நினைக்கின் றார்கள். பிள்ளைகள் கொழும்பில் படிப்பதை யும் அதுவும் ஆங்கிலத்தில் படிப்பதையும் விரும்புகிறார்கள்.



'தெனாலி'யில் ஒருகாட்சி

தமிழில் கதைக்கும்போது **But, So, Ok** போன்ற ஆங்கிலச் சொற்களை பிள்ளைகள் பேசுவதையும், இல்லாவிடில் அவ்வாறு பேச வேண்டும் எனவும் விரும்புகிறார்கள். 'சன்' தொலைக்காட்சி (இந்தியா) அறிவிப்பாளர்கள் பேசுவது போன்று பிள்ளைகள் பேசினால் கௌரவம் என்று நினைக்கிறார்கள். யாழ்ப் பாணத் தமிழைப் பேசினால் - ஏன் கிராமப் புறத் தமிழைப் பேசுகின்றாய் என்று கண்டிக் கின்றார்கள், கேலி செய்கின்றார்கள்.

இந்திய நடிகர் கமல்ஹாசன் "தெனாலி" என்ற படத்தில் - யாழ்ப்பாணத் தமிழில் பேசி நடித்தார். வெளிநாடுகளில் வாழும் யாழ்ப்பா ணத் தமிழர்கள் மகிழ்ந்தார்கள். கமல் யாழ்ப் பாணத் தமிழில் பேசிவிட்டார் என, கொழும்பு வாழ் ஆங்கில மொழி பேசும் தமிழர்கள் புகழ்ந்தார்கள். கமல் மனநிலை சரியில்லாத பாத்திரத்தை ஏற்று, அப்பாத்திரத்தை யாழ்ப் பாண மொழியில் பேசி நடித்தார். யாழ்ப்பா ணத் தமிழ் - மனநிலை சரியில்லாதவருக்குப் பொருத்தமானது என்று நினைத்திருக்கிறார். யாழ்ப்பாணத் தமிழை, கமல் கேவலப்படுத்தி யதை எம் தமிழர்கள் பலர் உணரவில்லை.

ஒரு இனத்தின் மொழியைக் கொச்சைப்ப டுத்திய கமலை, வாய்விட்டுப் புகழ்ந்த தமிழர் கள் பலர். தமிழைச் சீரழிக்கும் தனியார் தொலைக்காட்சி சேவை ஒன்று - தெனாலி படத்தின் யாழ்ப்பாணத் தமிழ் பற்றிப் புகழ, கமலுக்கு யாழ்ப்பாணத் தமிழைச் சொல்லிக் கொடுத்த - பி.எச்.அப்துல் ஹமீட் என்ற அறி விப்பாளரைக் கொண்டு - சிறப்பு நிகழ்ச்சி யைத் தயாரித்து ஒளிபரப்பியது.

கொழும்பில் தெமட்டக்கொடையில் பிறந் தவர் பி.எச் அப்துல் ஹமீட் ஆவார். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர் அல்ல. யாழ்ப் பாண வழக்குத் தெரியாத கமலுக்கு, அவர் யாழ்ப்பாணத் தமிழைச் சொல்லிக் கொடுத் திருக்கின்றார் என்றால் - கமல், யாழ்ப்பாணத் தமிழைப் பற்றி எவ்வளவு அறிந்துவைத்தி ருககிறார் என்பதை, சிறுபிள்ளையும் விளங் கிக்கொள்ளும்.

கமல், யாழ்ப்பாணத் தமிழர் மீதுள்ள அக்க றையால் தெனாலி படத்தைத் தயாரிகக வில்லை. இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும் இருக்கின்றார்கள். குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழர்களைக் குறிவைத்து வியாபார நோக் கிலேயே இப்படத்தை எடுத்தார். முழுக்க முழுக்க வியாபார நோக்கில் தயாரிக்கப்பட் டதே இப்படம் என, பேட்டி ஒன்றில் இலங்கையரான பாலுமகேந்திரா கூறியிருப் பதை இவ்விடத்தில் குறிப் பிடுவது பொருத்தம்.

கமல் பேட்டி ஒன்றிலும்- யாழ்ப்பாணத் தமிழை எனக் குக் கற்றுத் தந்தவர் பி.எச். அப்துல் ஹமீட் என்று பெரு மையாகக் கூறினார். ஹமீட் தமிழை சரியாக உச்சரிக்கி றார். பாராட்டலாம். ஆனால், யாழ்ப்பாணத் தமிழைச் சொல்லிக்கொடுக்க அவ ருக்கு என்ன தகுதி இருக்கி றது?

ராமதாஸின் "கோமாளி கள்" படத்தில் ஐயர் தமிழில பேசி நடித்தார் என்ற தகு தியை வைத்துக்கொண்டு- யாழ்ப்பாணத்திலே பிறக்காத, அங்கு வாழாத, அதுமட்டுமல்ல - யாழ்ப்பாணத் தமிழரைப் பிடிக்காத அப்துல் ஹமீட்டினை, யாழ்ப்பாணத் தமிழைச் சொல்லிக் கொடுக்க, கமல் தெரிவு செய்ததன் மூலம் - அவரது சுயரூபம் வெளிச் சத்துக்கு வந்தது. கமல் யாழ்ப்பாணத் தமி ழைப் பேசும்போது கேட்கவே அருவருப்பாக இருந்தது.

இவரைத் தொடர்ந்து - மணிரத்தினம் 'கன் னத்தில் முத்தமிட்டால்' படத்தை எடுத்தார். இவருக்கு இலங்கை இனப்பிரச்சினையின் கொடூரம் தெரியுமா? தெரியாது. இனப்பிரச்சி னையை வியாபாரமாக்கத் தெரியும்.

கமலின் குரு - கே.பாலசந்தர் இலங்கை வந்தார். அவரும் ஒரு படத்தின் இரண்டாவது பாகத்தை இலங்கையில் எடுக்க விரும்பினார். இரண்டாவது பாகத்தினை தொலைக்காட்சித் தொடராகவும் தயாரிக்க விரும்பினார். அதில் முக்கிய கதாநாயகி யாழ்ப்பாணத் தமிழில் பேசுகிறார். இவரும் யாழ்ப்பாணத் தமிழைக் கொலை செய்துவிட்டார். இப்போது இனப்பிரச் சினையும், யாழ்ப்பாணத் தமிழும் - வியாபாரத் திற்கு முக்கியபங்கை வகிக்கின்றன. இதனை உணராத, நம் தமிழர்கள் - புகழ்மாலை சூட டுவதும், ஆதரவு கொடுப்பதும் தொடர்கதை யாகின்றது.

அண்மையில் - தனியார் தொலைக்காட்சி ஒன்று, இந்தியாவிலிருந்து கவர்ச்சி நட்னத் தாரகைகள் சிலரையும், பாடகர்களையும் வர வழைத்தது. அவர்களை வரவேற்க - அமைச்சர் கள் சிலர் விமான நிலையத்திற்குச் சென்றி ருந்தனர். இந்த நிகழ்வினை, அத்தொலைக் காட்சி நேரடியாக ஒளிபரப்பியது. இந்தக் கேவ லத்தை யாரிடம் சொல்லி அழுவது.

இந்த தொல்லைக்காட்சி சேவை, வடபகுதிக் கும் தனது ஒளிபரப்பை விஸ்தரிக்க முயற்சி செய்கின்றது. புத்திஜீவிகள் சிந்திக்க வேண் டும். இன்றேல், இளைய சமுதாயம் சீரழிவதை எவராலும் தடுக்கமுடியாது. இருபது வருட காலப் போராட்டத்தின் பயனை அனுபவிக்க முன்னரே, தமிழ்க் கலாசாரம் அழிந்துவிடக் கூடிய அபாயம் ஏற்படலாம்.

**கொ**ழும்பில் வாழும் தமிழ் இளைஞர்க ளின் வாழ்வு சீரழிந்து கொண்டிருக்கின்றது. அந்த நிலை வடக்கு - கிழக்கு மாணவர்களுக் கும் ஏற்படக்கூடாது. ஏன் அப்படிச் சொல்கின் றேன் என்று கேட்கின்றீர்களா?

கொழும்பில் உள்ள திரையரங்குகளில் ஆபாசத் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப் படுகின்றன. இப்படங்களைப் பாடசாலை மாண வர்கள் முதல் வயது முதிர்ந்த கிழவர்கள் வரை முண்டியடித்துப் பார்க்கின்றனர்.

மலையாள ஆபாசப்படங்கள் - தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளிவருகின்றன. இப்படங்களே - கொழும்பில் திரையிடப்படு கின்றன. இதனால் பாதிக்கப்படுபவர்கள் தமிழ் இளைஞர்களே. குறிப்பாக, வடபகுதியில் இருந்து வந்து கொழும்பில் வாழும் இளைஞர் களேயாவர்.

இப்படங்கள் - கொழும்பு, நீர்கொழும்பு மலையகம் என்று, தமிழர்கள் அதிகமாக வாழும் இடங்களிலுள்ள திரையரங்குகளில் திரையிடப்படுகின்றன.

இப்படங்கள் தணிக்கை செய்யப்படுவ தில்லை. பெருமபாலான ஆபாசத் திரைப்ப டங்கள் - இலங்கைத் திரைப் படக் கூட்டுத்தாப னத்தில் இறக்குமதி செய்யப்பட்டவை என்று சொன்னால் நம்புவீர்களா?. இதுவரை 35 ஆபா சத் திரைப்படங்களை, இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்துள்ளதாம்.

கொழும்பிலுள்ள திரையரங்குகள் நட்டத் தில் இயங்குவதாலேயே, இப்படியான திரைப் படங்களை திரையிடுகின்றார்கள் என, திரைய ரங்கு முகாமையாளர் ஒருவர் கூறினார். இப்ப டங்களுக்குத் தினமும் கூட்டம் சேருகிறதா என்று கேட்டேன். நாங்கள் 10.30, 2.30, 6.30, 9.30 காட்சிகளை தினமும் காட்டுகின்றோம் என்றால் கூட்டம் வரா மலா? என்று என்னிடம் கேள்வி கேட்டார்.



'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் ஒருகாட்சி

இந்தத் திரைப்படங் களைப் பார்க்க எந்த வயதுள்ளவர்கள் வருகி றார்கள் என்று கேட் டேன். வெளியே சொல்லி விடாதீர்கள் என்று சொல்லிவிட்டு - கிழமை நாட்களில் பாடசாலை மாணவர்களே அதிகம் வருகின்றார்கள் என் றார். பாடசாலை மாண வர்களை நீங்கள் தடுப் பதில்லையா? என்று கேட்டேன் நான். தடுத் தால் என் வேலையே போய்விடும். எனக்கு ஏன் வீண்வம்பு? என்றார்.

சில திரையரங்குகளில் படம் முடிவடை யும் நேரங்களில் நான் ஓரமாக நின்று, யார் யார் படம் பார்த்துவிட்டு வருகின்றார்கள் என்று அவதானித்தேன். கிழமை நாட்களில் பாட சாலை மாணவர்கள் செல்கிறார்கள் என்பது உண்மைதான். செல்லும் மாணவர்கள் உயர் தர வகுப்பைச் சேர்ந்தவர்கள். பாடசாலைச் சீருடையுடன் செல்லும் மாணவர்கள் மிகக் குறைவு.

**கொழும்பிலிருந்து உதரன்**

ரீயூசன் என்று சொல்லிவிட்டு, திரையரங் கிற்கு வரும் மாணவர்களே அதிகம். அவர் கள் மட்டுமல்ல. உயர்தர வகுப்புப் படித்து விட்டு கணினி வகுப்புகள், மற்றும் பிரத்தியேக வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்களும் உள்ளனர் . வெளிநாட்டுப் பணத்தில் ஊர்சுற் றும் இளைஞர்களும் இதில் அடக்கம்.

உங்களுடன் வேதனையான சம்பவமொன் றையும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். அன்று ச்னிக்கிழமை திரையரங்கு ஒன்றில் இருந்து 10.30 காட்சி முடிந்து ரசிகர்கள் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். தற்செய லாக அத்திரையரங்குப் பக்கமாக, அதாவது- மருதானைப் பக்கமாகச் சென்று கொண்டிருந் தேன். ஆபாசப்படம் திரையிடப்பட்ட திரைய ரங்கிலிருந்து வெளியேறுபவர்களில் - இளம் ஆசிரியர்கள் சிலரையும் காணமுடிந்தது.

இந்த ஆசிரியர்கள் - கல்வியியற் கல்லூரி களில் பயிற்சியை முடித்துக்கொண்டவர்கள். வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்தவர் கள். தற்போதுதான், கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருக்கின்றார் கள். மிகவும் வயது குறைந்தவர்கள். எதிர் கால சமுதாயத்தை வழிநடத்தவேண்டிய இந்த ஆசிரியர்களே இப்படி நடந்தால், எமது மாணவ சமுதாயத்தை வழிநடத்துவது யார்? கிராமப் புற இளைஞர்கள், ஆசிரியர்களாக தலைநக ரில் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு திரையரங்குகளே பொழுதுபோக்கிடங்கள். தொடர்ந்து இப்படியான படங்களை இளம் ஆசிரியர்கள் பார்ப்பார்களேயானால், அவர்கள் மனநிலை மாற்றமடையும். இந்த மனமாற்றம், அவர்களையும் தவறான வழிக்கு இட்டுச் செல்லும்.

தலைநகருக்கு பிள்ளைகளை படிக்க அனுப்பும் பெற்றோர்கள் மட்டுமல்ல, தலைநக ருக்குப் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் பெற்றோரும் அவதானமாக இருக்கவேண்டும். பாடசாலைக்கு, ரியூசனுக்கு தங்கள் பிள்ளை களை அனுப்பும் பெற்றோர்கள் அவதானமாக இருப்பது அவசியமாகும்.

இளம் சமுதாயத்தை - தொலைக்காட்சி மட்டுமல்ல, ஆபாசத் திரைப்படங்களும் சீரழிக் கின்றன. இப்போது தலைநகரில் உள்ள 'இன் ரநெற்' பாவனையும் இளம் சமுதாயத்தைக் கெடுத்துவருகின்றது. மாணவர்களை, பெற் றோரின் மேற்பார்வையுடன் இன்ரநெற்றைப் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். இப்போது இன்ரநெற் சேவையை வழங்கும் தனியார் நிலையங்கள் கொழும்பில் பெருகிவிட்டன. இதில் பலபேர் பாலியல் படங்களையே பார்ப் பதாக தெரியவருகின்றது.

தலைநகருக்கு பிள்ளைகளை அனுப்பவி ரும்பும் பெற்றோரே சிந்தியுங்கள். தலைநகரில் வாழவிரும்புகின்றீர்களா? கலாசார பாரம்பரியங் களைக் கடைப்பிடிக்கும் சொந்த மண்ணில் வாழவிரும்புகிறீர்களா? சொல்வது என் கடமை முடிவு உங்களுடையது.

❖

## நான்கு பாடசாலைகளுக்கு கட்டடம் அமைக்க நிதி ஒதுக்கீடு

பொதுக்கல்வித் திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால், வடமராட்சிக் கல்வி வலயத்தில் நான்கு பாடசாலைகளுக்கு இவ்வருடம் கட்டடங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோ லிக்கப் பாடசாலை, கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை ஆகியவற்றுக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்காக, கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டன. ஆனால், இதுவரை எவரும் இதற்கு விண்ணப்பிக்கவில்லையென வடமராட்சி வலயக்கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (122)




அண்மையில் யாழ். எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெற்ற தாயகம் 47 ஆவது சஞ்சிகை அறிமுகவிழாவில் - யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் இ.குமரன் உரையாற்றுவதையும், பல்கலைக்கழகப் பொருளியற்துறைத் தலைவர் சிவநாதன், தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவர் கலாநிதி இ.முருகையன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### இல்ல விளையாட்டுப் போட்டி

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு கிருஷ்ணா மழலைகள் கல்விப் பூங்காவின் 2003 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு, மட்டு வில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சன சமூக நிலைய முன்றலில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தின ராக - யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் கலந்து கொள்வார்

### கட்டாக்காலி நாய்கள் பிடித்தழித்தல்

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் கட்டாக் காலி நாய்களைப் பிடித்தழிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள் ளதால், வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளது. அத்துடன், அவற்றிற்கான வருடாந்த உரிமத் தகட்டினைப் பெற்று உரிய காலத்தில் தடுப்பூசிகளை ஏற்றும் படியும், யாழ்.மாநகர சபை ஆணை யாளர் இ.இராமலிங்கம் கேட்டுள் ளார்.

### வடமராட்சி வலய ஆங்கிலதினப் போட்டிகள்

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள், நாளை மறுநாள் செவ்வாய்க்கிழமையும், அடுத்த மாதம் 2 ஆம் திகதி - சனிக்கிழமையும் காலை 9 மணி முதல், வட இந்து மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள்ளதாக வடம ராட்சி கல்வி வலய, ஆங்கில உத விக் கல்விப் பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.

கரவெட்டி, பருத்தித்துறை, மரு தங்கேணி ஆகிய கோட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட டிய மாணவர்கள் வலயமட்டப் போட் டிகளில் பங்குபற்றவுள்ளனர். (122)

### பொதுசன உதவிபெறுபவர் பட்டியல் மீளாய்வு

(நவிண்டில்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பொதுசன உதவிப் பணம் பெறுவர்களின் பட்டியல், மீளாய்வு செய்வதற்கான ஏற்பாடுகள செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவரு கிறது. (17)

### விடுமுறைக்கால மேலதிக வகுப்புக்கள்

கடந்த காலங்களில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்களின் சித்தியடைந்த வீதம் குறைவடைந்த காரணத்தால், இம்முறை டிசம்பரில் நடைபெறவுள்ள க.பொ.த சதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாண வர்களுக்கான விடுமுறைக்கால மேலதிக வகுப்புக்களை நடாத்த, உடுவில் கல்விக் கோட்டப் பணிப் பாளரும், அதிபர்களும் தீர்மானித் துள்ளனர். (101)

### விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 49 விளையாட்டுக் கழகங் களுக்கான, விளையாட்டு உபகர ணங்கள் - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் கடந்த செவ் வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

மாவட்ட விளையாட்டு அதிகாரி க.கனகராசா தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் - வன்னி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா, கிளிநொச்சி மாவட்ட விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் தேவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(122)



சதாமின் புதல்வர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட பங்களா அறையை முதலாவது படத்திலும், மேற்படி பங்களாவை அமெரிக்கப் படையினர், நேற்று புல்டோசர் உதவியுடன் இடித்துத் தரைமட்டமாக்கும் முயற்சியை ஆரம்பித்துள்ளதை, இரண்டாவது படத்திலும் காணலாம்.

# சதாமின் மெய்ப் பாதுகாவலர்கள் கைதென அமெரிக்கா அறிவிப்பு!

சதாம் ஹுசைனின் மெய்க்காவலர்களில் சிலரைத் தாம் கைதுசெய்துள்ளதாக, அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை துப்பு ஒன்று கிடைத்ததைத் தொடர்ந்து - சதாமின் சொந்த இடமான திக்ரிட்டில் நடைபெற்ற தேடுதலில், 13 பேர் கைதானதாகவும், இவர்களில் 10 பேர் சதாமின் மெய்க்காவலர் படையில் இருந்தவர்கள் எனவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, சதாமின் மனைவியர் இருவரில் ஒருவரை, அமெரிக்க அதிகாரிகள் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

சதாமின் புதல்வர்கள் இருவரின் இறப்பிற்குப் பின்னர், சதாமின் ஆட்சிக்கு ஆதரவானவர்கள் குறித்து, அநேகமான துப்புகள் கிடைத்து வருவதாகவும், இதன்மூலம் அமெரிக்கா மீதான எதிர்ப்புணர்வுகள் குறையும் வாய்ப்புகள் ஏற்படலாம் எனவும் அமெரிக்க மேஜர் ஜெனரல் ரே ஓடிரே தெரிவித்தார்.

இதேவேளை -

ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் உருவாக்கப்பட்ட, ஈராக் பொலிஸ் படையின் தலைவர் பிரிகேடியர் அஹமட் கட்ஹிம், பக்தாத்தில் நேற்று நடைபெற்ற மோதல் ஒன்றில் காயமடைந்தார்.

காலில் காயமடைந்த இவருடன் இச்சம்பவத்தில் மேலும் ஐந்து அதிகாரிகள் துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்துள்ளார். பக்தாத்தில் கார் கடத்தல் மற்றும் ஆட்கடத்தலில் ஈடுபடும் வன்முறைக் கோஷ்டியே, இவர்களைச் சுட்டுக் காயப்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க - சுட்டுக் கொல்லப்பட்ட சதாமின் புதல்வர்களது சடலங்களில் 20 இற்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருந்தமையால், சடலங்களின் முகங்களை முன்பு இருந்தவாறு மாற்றுவதற்கான முக மீளுருவாக்கல் நடைமுறை மேற்கொள்ளப்பட்டதாக, அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உலகவலம்

# தேவாலயம் மீது ஷெல் வீழ்ந்து லைபீரியாவில் 3 அகதிகள் பலி!



வெடித்துக் கிளம்பும் துயரம்

லைபீரியத் தலைநகர் மொன்ரோவியாவில், அகதிகள் நிறைந்திருந்த தேவாலயம் மீது, மோட்டார் குண்டு வீழ்ந்ததில் - அங்கு தஞ்சமடைந்திருந்த மக்களில் மூவர் பலியாகினர். மேலும் பலர் காயமடைந்தனர். கூரையைப் பிய்த்துக் கொண்டு, அகதிகள் இருந்த தேவாலய மண்டபத்தின் நடுவில் மோட்டார் குண்டு வீழ்ந்து வெடித்தது.

அமெரிக்கா தனது படையிருடன், ஒரு கப்பலை லைபீரியாவுக்கு அனுப்புவதாக அறிவித்ததைத் தொடர்ந்து, கடந்த வெள்ளியன்று - லைபீரியக் கிளர்ச்சியாளர்கள் போர்நிறுத்தத்தை அறிவித்தனர். இந்தப் போர் நிறுத்தக் காலத்தின்போதே, மோட்டார் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

கிளர்சியாளர்கள் தொடர்ந்தும் தலைநகரின் மத்திய பகுதியை நோக்கி சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, நேற்றுமுன்தினம் விளையாட்டு மைதானம் ஒன்றின் மீது வீழ்ந்த ஷெல்லினால், எட்டுப் பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திரதினவிழாவையொட்டி மொன்ரோவியாவில் நடைபெற்ற பேரணியில், ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயலர் உரையாற்ற இருந்தபோதே, இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

# இரும்பு பாதுகாப்பு கவசங்கள் ஜோகனஸ்பேர்க்கில் அகற்றம்!



அதிகரிக்கும் வன்முறை



அகற்றப்படும் பாதுகாப்பு வேலி.

தென்னாபிரிக்காவின் மிகப்பெரும் நகரான ஜோகனர்ஸ்பேர்க்கில், பொதுமக்கள - தமது வீடுகளிற்கு முன்பாகவும் தனிப்பட்ட வீதிகளிலும் பாதுகாப்பிற்காக அமைத்திருந்த பாதுகாப்பு வேலிகள், முட்கம்பிச் சுருள்கள், சுழல் இரும்புக் கதவுகள் என்பவற்றை அகற்றும் நடவடிக்கையில், நகர அதிகாரிகள் இறங்கியுள்ளனர்.

நகரில் - ஒரு சிநேகபூர்வ சூழ்நிலை காணப்படவேண்டும். ஒருவரை ஒருவர் எதிரியாகப் பார்த்த காலம் போய்விட்டது என, நகர அதிகாரிகள் தெரிவித்தனர். பாரிய வெட்டுக் கருவிகள், வெல்டிங் கருவிகளின் உதவியுடன், இந்த இரும்புத் தடுப்புக்களை ஊழியர்கள் அகற்றி வருகின்றனர்.

எனினும், 300 அளவினதான மக்கள் - தமது பாதுகாப்பிற்காக அமைத்திருந்த இந்த இரும்புப் பாதுகாப்புக் கதவுகளை அகற்ற வேண்டாம் எனக் கேட்டுள்ளனர். கதவுச்சமூகம் (Gated community) என அழைக்கப்படும் இவர்கள், குற்றச்செயல்கள் அதிகம் நடைபெறும் ஜோகனர்ஸ் பேர்க் நகரில், அதிகாரிகளை விட இந்த இரும்புக் கவசங்களே தம்மைக் காக்கக்கூடியவை எனக் கருதுகின்றனர்.

கடந்த ஜனவரி முதல் இன்றுவரை, 35 குற்றச்செயல்கள் இந்த நகரில் நடைபெற்றுள்ளது என, நகரவாசி ஒருவர் கூறினார். கடந்த ஆண்டு, இந்த நகரில் ஆயிரம் கொலைகள் நடந்துள்ளன. 15 ஆயிரம் வீடுகள் கொள்ளையிடப்பட்டன.

12 தடவை, துப்பாக்கி முனையில் பொருட்களைப் பறிகொடுத்த பெண்ணொருவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது இந்தப் பாதுகாப்பு கவசங்களை அகற்றுவதன் மூலம், எம்மை நிர்வாண நிலையிலேயே விடுகின்றனர். இனி உறக்கத்திற்கும் செல்லமுடியாது என்றார்.



சதாமின் சொந்த நகரான திக்ரித்தில், அமெரிக்கப் படையின் நான்காவது பிரிவின் சோதனை நிலையமொன்றில், ஈராக்கியர் ஒருவர் தனது காரை விட்டு பலவந்தமாக அமெரிக்கப் படைச் சிப்பாய் ஒருவரால் வெளியே இழுத்தெடுக்கும் காட்சி.

## மீள்விசாரணை

ஈராக் போரின்போது, எதிரியின் தாக்குதலால் இறந்ததாகக் கூறப்பட்ட பிரிட்டிஷ் அதிரடிப்படை வீரரின் மரணம் குறித்த, தனது விசாரணை அறிக்கையை பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு மீள ஆராய்ந்து வருகிறது.


விழியின் மீது விழிப்பாயிருங்கள்

☆ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகிறீர்களா?
☆ ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகிறீர்களா?

அப்படியாயின் நிச்சயம் கண் குறைபாடுதான் காரணம்.

எம்மிடம் வாருங்கள்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து, நவீன ரக பிரேம்களில் போட்டோ கிறே, பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக் கொள்ளலாம். (பிளாஸ்டிக் லென்ஸ் விரும்பிய நிறங்களில் எம்மிடம் உண்டு.)

அத்துடன்

முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும், மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம் -

எரிக் கணேஷ்

மூக்குக் கண்ணாடியகமும், பல் கட்டுமிடமும்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P:2222486

கிளை - 80,K.K.S. வீதி, சுன்னாகம்

91, K.K.S. வீதி, கொக்குவில்.

(சி-1264)



வேப்பெண்ணையில் தயாரிக்கப் பெற்ற நீம் சோப்பின் மேலுறையை அனுப்பி, யோகாசனப் படங்களைப் பெற்றுக்கொள்ளவும்.
வேப்பம் விதை சேகரித்துத் தரவும்.
ஒரு கிலோ பத்து ரூபா

மில்க் வைற்,
த.பெ.இல. 77,
யாழ்ப்பாணம். (சி-1168)



நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், பிரியங்கா, விவேக் நடித்த
காதல் சடுகுடு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
THE MUMMY
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1138)



ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்



பிரியமான தோழி
10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதி செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன்
(சி-1137)



சிறு விளம்பரம்

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima, Broiler குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள் 04-08-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டி பதிவுசெய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசா ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (428)

**கோழித்தீன் விற்பனை**

எம்மிடம் தரமான Prima கோழிததீன் வகைகள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். உப விநியோகத்தவர்களுக்கு 5% தொடக்கம் 7% கழிவு கொடுக்கப்படும். ஏற்றுக் கூலி இலவசம்.
தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (431)

**இறைச்சிக் கோழி விற்பனை**

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள், சுகாதார முறைப்படி உடன் சுத்தம்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம்.
(Electronic நிறுவை.)
(நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (430)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

Prima கோழித்தீன் கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டும் பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். உங்கள் பதிவுகளை 31.07.2003 இற்கு முன் புதுப்பிக்கவும்.
தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-1259)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் HONDA CD 125 BENLY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
ப.கிருஷ்ணமூர்த்தி (தேவி அச்சகம்), யாழ்ப்பாணம். T.P:2789 (434)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வடக்கு - கிழக்கு பாதுகாப்பு நிலைவரம்! பிரான்ஸ் தூதரகம் அறிக்கை தயாரிப்பு!

இலங்கையின் வட- கிழக்குப் பகுதியின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக, பாகிஸ்தானிலுள்ள ப்ரெஞ்சுத் தூதரகம் - நிலைவர அறிக்கையொன்றைத் தயாரித்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்த நிலைவர அறிக்கையைத் தயாரிப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக, பாகிஸ்தானிலுள்ள, பிரான்ஸ் நாட்டின் பதில் தூதுவரான- முன்னாள் ப்ரெஞ் இராணுவ அதிகாரி, கடந்த வாரம் இலங்கையின் வட- கிழக்குப் பகுதிகளுக்கு நேரடி விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

வட - கிழக்கில் உள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், மதத் தலைவர்கள் மற்றும் பாதுகாப்புத்துறை சார்ந்த அதிகாரிகளையும் இவர் சந்தித்து உரையாடியுள்ளார்.

மிகவிரைவில் இவரால் தயாரிக்கப்படும் அறிக்கை, ப்ரெஞ் அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரியவருகிறது.

(க)

உங்கள் நிறைவு.... எங்கள் சேவை.
மோட்டார் சைக்கிள்களைச்
சிறப்பாகச் சேவிஸ் செய்து
கொள்ள நாடுங்கள்



இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்
32 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
வணிக விடுமுறை நாள்கள் தவிர்ந்த
எல்லா நாள்களிலும் (ஞாயிறு உட்பட)
சேவிஸ் செய்து கொள்ளலாம். (சி-1170)

## லண்டனில் வலைப்பந்தாட்டம்

தமிழீழ விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக, பிரிட்டன் சென்றுள்ள - தாயக வலைப்பந்தாட்ட அணி, அங்கு லண்டன் வேம்படி மகளிர் அணியுடனான சிநேகபூர்வ ஆட்டம் ஒன்றில், 57 இற்கு14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

## 'கன்னத்தில் முத்தமிட்டால்' 5 தேசிய விருதுகள்

மணிரத்தினம் இயக்கிய 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்துக்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

சிறந்த குழந்தை நட்சத்திரமாக கீர்த்தனாவும், சிறந்த பாடலாசிரியராக வைரமுத்துவும்,சிறந்த இசையமைப்பாளராக ஏ.ஆர்.ரஹ்மானும், சிறந்த படத்தொகுப்பாளராக சிறீகர் பிரசாத்தும் சிறந்த ஒலியமைப்பாளராக லட்சுமி நாராயணனும் இப்படத்திற்காக தேசிய விருது பெற்றுள்ளனர்.

# திருமலையில் நேற்று ஹர்த்தால்

திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தினால் வழமைநிலை முற்றாகப் பாதிப்படைந்தது. குரங்குப்பாஞ்சான் பகுதியில், விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட புதியமுகாமை அகற்றுமாறு, கண்காணிப்புக்குழு கூறியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அடிக்கடி நடைபெற்றுவரும் படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துமே நேற்று ஹர்த்தால் நடத்தப்பட்டது.

## இளநிலை அதிகாரிகள்...

வன்னியிலுள்ள விடுதலைப் புலிகளின் பாசறையொன்றில் நேற்று முன்தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பயிற்சியை முடித்து வெளியேறிய இளநிலை அதிகாரிகளில் விசேட பெறுபேறுகளைப் பெற்றோருக்கு பரிசில்களையும் தேர்ச்சி பெற்ற அதிகாரிகளுக்கு சான்றிதழ்களையும் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, வட போர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், கேணல் பானு, கேணல் சொர்ணம், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்படப் பொறுப்பாளர்களும் போராளிகளும் கலந்துகொண்டனர்.

(க,லி,ரா,ச)

## மூதவை உறுப்பினரை...

முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சித்த மருத்துவத்துறை மாணவர் மன்றத் தலைவர், செயலாளரை மட்டும் உள்ளே வந்து தம்முடன் பேசுமாறு மூதவை உறுப்பினர்கள் அழைத்தனர்.

இதற்கு மறுப்பு தெரிவித்த மாணவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் மூதவைத் தீர்மானத்தை தெரியப்படுத்துமாறு கோரினார்.

இறுதியில் பதினைந்து மாணவர்களை மட்டும் தம்முடன் பேச்சு நடத்த இராமநாதன் மண்டப கேட்போர் கூடத்திற்கு வருமாறு மூதவை உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதன்படி - பதினைந்து மாணவர்கள் சென்று மூதவை உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சுக்கள் பல்வேறு இழுபறிகளுடன் மாலை 6.30 மணியளவில் நிறைவடைந்தன.

சித்த மருத்துவத்துறையை பீடமாக மாற்றுவதற்காக மாணவர்களும்,அதிகாரிகளும் இணைந்து செயற்படுவது என, இச்சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக மூதவையினர் தெரிவித்தனர்.

இதன் பின்னரே மூதவை உறுப்பினர்கள் மண்டபத்திலிருந்து வெளியேற மாணவர்கள் அனுமதித்தனர்.

## அரசின்...

சமர்ப்பிக்கவுள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்னர், அரசின் இந்த நான்கு பக்கத் திட்ட வரைபு, புலிகளிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது தெரிந்ததே.

## சரணடைந்த...

சோமலதாகே சிறில் ராஜபக்ஷ என்பவரே சரணடைந்த சிப்பாயாவார்.

இச்சிப்பாயை நேற்றுக்காலை விடுதலைப் புலிகள், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அதிகாரிகளிடம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிரதிநிதி .முன்னிலையில் ஒப்படைத்தனர்.

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ரத்மலகஹவெவ என்ற கிராமத்தைச் சேர்ந்த இந்தச் சிப்பாய் - கிளாலி முகாமில் கடுமையாக நடத்தப்பட்டதாகவும், இதனாலேயே தான் புலிகளிடம் சரணடைவது எனத் தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

புலிகளிடம் சரணடைந்து விடுவிக்கப்பட்ட சிப்பாய், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மூலமாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது



யாழ்.பல்கலைக்கழக மூதவைக் கூட்டம் நடைபெற்றபோது - மூதவை உறுப்பினர்களை பூட்டி வைத்து வாயிலில் போராட்டம் நடத்தும் சித்த மருத்துவ மாணவர்கள்.

# வாழைச்சேனையில் கைதான போராளிகளுக்கு பிணை அனுமதி!

மட்டக்களப்பில் - வாழைச்சேனை வீதியில் ·சென்று கொண்டிருந்த இரு போராளிகள், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும், நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது - நீதிபதி இருவரையும் பிணையில் விடுதலை செய்ததுடன், எதிர்வரும் 8 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டார்.

நேற்றுமுன்தினம், மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியூடாக பயணம் செய்துகொண்டிருந்த இருவரையும் வழிமறித்த பொலிஸார், இவர்கள் சென்றுகொண்டிருந்த வாகனத்தின் ஆவணத்தை கோரியிருந்தனர். ஆவணம் எதுவும் இல்லாததைக் காரணங்காட்டிப் ·பொலிஸார் இவர்களைக கைதுசெய்திருந்தனர்

## நாட்டுக்கூத்து விழா

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்கள் பங்குபற்றும் நாட்டுக்கூத்து விழா, இன்று பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரயில் மேலதிக கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை- தமிழ்த்தினப் போட்டியில்- நாட்டுக்கூத்து, இசைக்கருவி ஆகிய பிரிவுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான- பரிசளிப்பு வைபவம் நேற்று இடம்பெற்றது.

## தமிழ்த்தினப் போட்டி...

யில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்விக்கழக துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தியாகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு- மாணவர்களுக்கான பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கினர்.

இதேவேளை, வடக்கு- கிழக்கு தமிழ்த்தின விழாவின் இரண்டாவது நாளாக நேற்று நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**நாடகம்**

முதலாம் இடம்- புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், இரண்டாம் இடம் - மன்னார் புனித அனஸ் மகாவித்தியாலயம், மூன்றாம இடம் - பரந்தன் இந்துக் கல்லூரி

**சிந்துநடைக்கூத்து (விசேடம்)**

முதலாமிடம்- சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, இரண்டாமிடம்- முல்லைத்தீவு ஸ்ரீ முருகானந்தா வித்தியாலயம்.

**விசேட கூத்து (வடமோடி)**

முதலாமிடம்- மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகாவித்தியாலயம்.

**இசைநாடகம்**

முதலாமிடம்- உடுவில் மகளிர் கல்லூரி, இரண்டாமிடம்- வவுனியா விபுலானந்தா வித்தியாலயம், மூன்றாமிடம்- கிளிநொச்சி முழங்காவில் மத்திய மகா வித்தியாலயம்.

**நாட்டுக்கூத்து (வடமோடி)**

முதலாமிடம்- மட்டு.செங்கலடி மத்திய கல்லூரி, இரண்டாமிடம்- முல்லைத்தீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்.

**நாட்டுக்கூத்து (தென்மோடி)**

முதலாமிடம்- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இரண்டாமிடம்- மட்டு.கன்னன்குடா மகா வித்தியாலயம், மூன்றாமிடம்- கிளிநொச்சி புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க பாடசாலை.

**சிந்து நடைக்கூத்து**

முதலாமிடம்- அளவெட்டி அருணோதயா கல்லூரி, இரண்டாமிடம்- வவுனியா பூந்தோட்டம் அ.த.க பாடசாலை, மூன்றாமிடம் - முல்லைத்தீவு முருகானந்தா வித்தியாலயம்.

அழகிய கூந்தலின் ரகசியம்




பக்க விளைவு அற்றது

பயோட்டின் H உடன்
இயற்கையான விட்டமின் E
சேர்க்கப்பட்டு தற்போது
பயோட்டினெக்ஸ் E
என்ற பெயரில் அறிமுகமாகிறது.

(சி-1142)

பயோட்டினெக்ஸ் -E

எது உங்கள் பிரச்சினை
- தலைமயிர் உதிர்கிறதா
- தலைமயிர் வளர்ச்சியின்மையா
- தலைமயிர் நுனி வெடிப்பா
- வலுவிழந்த தலைமயிரா
- வறண்ட சருமமா
- தோலில் சுருக்கம் விழுந்து வயதான தோற்றமா
- சரும நோய்களா
- உடைந்த ஒழுங்கற்ற நகங்களா

?



பயோட்டினுடன்
விட்டமின் - E யும்
சேர்ந்துள்ளதால்
சிறந்த பயன்
கிடைக்கும்

இவ்வனைத்துப் பிரச்சினைகளுக்கும் உடன் நிவாரணி விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்தப்பட்ட

பாவனை முறை
தினம் 2 கப்சியூல்ஸ்
3 மாத காலத்திற்கு
பாவிக்கவும்.

BIOTINEX -E

இயற்கையான பயோட்டினெக்ஸ் -E
தெற்காசிய மக்களுக்கென
பிரத்தியேகமாகத்
தயாரிக்கப்பட்டது சிறப்பம்சமாகும்.

மற்றும் நாடளாவிய ரீதியில் அனைத்து முன்னணி பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். முகவர்:
ஜெகன் பார்மசி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021-2223191

வன்னி முகவர்:
அகிலன்ஸ் பார்மசி
பிள்ளையார் மருந்தகம்,
கிளிநொச்சி.

Marketed By:
Arkem Colombo
Tel: 470290, 075-344436, E.mail - arkem@sltnet.lk

யாழ்.F.M. சேவையில்
- வர்த்தக விளம்பரம்
- பிறந்த தின வாழ்த்து
- மரண அறிவித்தல்
எதுவானாலும் விளம்பரம்
செய்திட

யாழ் - கொழும்பு
பிரயாண ஒழுங்குகள்
செய்திட
நாடுங்கள்
மூர்த்தி விளம்பர சேவை
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P:- 2789
(433)

மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திரமும் 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.
(432)
கிருஷ்ணமூர்த்தி,
114/19 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.- 2789

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.